# திசை

THISAI


### தாய் இல்லாப் பிள்ளைகள்

யாழ். பொது நூலகம் குண்டர்களால் தாக்கப்பட்டு, எரிக்கப்பட்டு ஏறக்குறைய எட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.

இதனை யார் செய்தது என்று இதுவரை விசாரணை செய்யப்படவில்லை.

இப்பின்னணியில் நூலகம் மீண்டும் மீண்டும் நொருக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அது திறக்கப்படாத நிலையில் கிளை நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக்கிளைகள் தாய் இல்லாத பிள்ளைகளா?

### கிழக்கில் மீண்டும் கலகம்

அக்கரைப்பற்றுப் பகுதியில் மீண்டும் முஸ்லிம்களுக்கெதிரான அசம்பாவிதங்கள் அவிழ்த்து விடப்பட்டுள்ளன வாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளன.

இவ்வன்செயல்களை தூண்டிவிட்டு சுயலாபம் பெறும் சக்திகளை களைந்தெறிய அரசு முன்வராதா?


திசை 1 | 2-6-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 21


# தீக்கோழிப்பார்வை நமது பிரச்சினையைத் தீர்க்காது

**இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுமுடிந்த முதலாம் கட்டப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் வட-கிழக்கு மாகாணத்தை இணைப்பது குறித்து வாக்கெடுப்பை நடாத்தாது ஜனாதிபதி பின்போடலாம் எனப் பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது.**

அரசியல்வாதிகள் இத்தகையானசமயோசிதமான நடவடிக்கையால் தப்பிக்கொள்வது வழக்கமே.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகளே இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையை, இலங்கை சுதந்திரம் பெற்ற 41 ஆண்டுகளுக்கு பின்னரும், நீடிப்பதற்கு வழிகோலியுள்ளன.

சிங்கள ஆளும் வர்க்கம் அன்றிலிருந்து இன்றுவரை தமிழர்களுடன் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள தயாராகவிருந்ததில்லை, தயாராகவுமில்லை.

வட—கிழக்கு மாகாணம் இணைக்கப்பட வேண்டுமென்பதின் தாற்பரியத்தை இலங்கை அரசு உணரவேண்டும்.

பசப்பு வார்த்தைகள் வேண்டாம்.

கிழக்கு வாழ் முஸ்லிம் மக்களே இணைப்பிற்குத்தயார் ஒரு நிபந்தனையுடன்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைப்பு வாக்கெடுப்பை பின்போடவேண்டும் என ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

இதன் அடிப்படையிலேயே ஜனாதிபதி வாக்கெடுப்பைப் பின்போடுவார்.

தீக்கோழி தனது தலையை மண்ணிற்குள் மறைப்பதால், பிரச்சினைகள் தீர்வதில்லை.

வீட்டைக் கூட்டிவிட்டு, அழுக்கை கம்பளத்திற்குக் கீழ் தள்ளிவிடுவதால், வீடு சுத்தமாவதில்லை.

ஜனாதிபதி, வாக்கெடுப்பைப் பின்போட நினைப்பதால், பிரச்சினையைத் தீர்த்துவிட்டார் என்றில்லை.

''புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை, அதிக புரிந்துணர்வுக்குரிய வழிகளையும், எதிர்கால நல்லுறவுக்கான பலமான அத்திவாரத்தையும் போட்டுள்ளது'' என ஜனாதிபதிச் செயலக அறிக்கை கூறுகிறது.

ஆகவே ஒத்திப்போடும் விவகாரங்களைக் கைவிட்டு இக்கூற்றை உறுதிப்படுத்துவது போல் அவரின் செயல்கள் ஆரம்பமாகுமா என்று தமிழ் பேசும் இனம் எதிர்பார்க்கிறது.

### மானியக்குழுவின் கைவிரிப்பு

'காணமல்' போன 18 பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றி தமக்கு எதுவும் தெரியாது என இலங்கைப் பல்கலைக்கழக மானியக்குழு அறிவித்துள்ளது.

இம் மாணவர்கள் கொழும்பு, ஜயவர்த்தனபுர, மொரட்டுவ, கெலனியா, ருஹுணு, பெரதெனியா ஆகிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்கள்.

இம் மாணவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதனைக் கண்டுபிடிக்குமாறு இராணுவத்தினரையும், பொலிசாரையும் மானியக் குழு உயர் அதிகாரி கேட்டுள்ளார்.

வட-கிழக்கு அனுபவத்திலிருந்து அறிந்த ஒன்று —'காணமற்' போனவர் காணமற் போனவரே.

### 2 - ஆம் கட்டப்பேச்சில் முஸ்லிம்கள் ?

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை பற்றி யோகி பி.பி.சிக்கு அளித்த பேட்டியின்போது, தாம் முஸ்லிம்களோடு அவர்களின் பிரச்சினை பற்றி நீண்ட நேரம் கதைத்ததாகவும், அவசியம் ஏற்படின் இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது முஸ்லிம்களும் கலந்துகொள்ளலாம் என்றும் அபிப்பிராயம் தெரிவித்தார்.

மேலும் அவர் தமது இயக்கத்தில் பல முஸ்லிம் இளைஞர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளனர் என்றும் முஸ்லிம்களுக்குரிய உரிமைகளைக் கொடுக்கத் தாம் தயங்கமாட்டார்கள் என்றும் குறிப்பிட்டார்.

## நாம் எங்கே செல்கிறோம்?

"இணைப்பு எதிர்ப்பு பிரச்சாரத்துக்கு காலம் வந்து விட்டது. ஜே. ஆர்.ஜெயவர்த்தன அபிப்பிராய வாக்கெடுப்பின் போது இணைப்புக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய விரும்புவதாகக் கூறினர். இப்போது அந்தப் பிரச்சாரத்துக்கு நேரம் வந்துவிட்டது. ஜே. ஆர். ஜெயவர்த்தன இதைச் செய்ய முன்வரவேண்டும். தற்போதைய ஜனாதிபதியும் இணைப்புக்கு எதிரான பிரச்சாரத்தில் பங்கு கொள்ள வேண்டும்.''

— சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில்.

''மாகாண சபை அற்ப உரிமை. இதைக்கூட அதிகாரத்துடன் 'வழங்கமறுத்தால் போராட்டம் தொடரும் அமைதி ஏற்படாது.''

—யாழ் மாவட்ட எம். பி. க. பிரேமசந்திரன்

''முஸ்லிம்களை புறக்கணித்துவிட்டு, மாகாணசபை சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தீர்க்க முடியாது. முஸ்லிம்களை மதிக்காமல் செய்யப்படும் ஒப்பந்தங்கள் வெற்றியளிக்க மாட்டா.

—லலித் நாடாளுமன்றத்தில்.

''தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இந்தியப்படையை விட வேறு சக்திகள் கிடையாது.

— மாகாணசபை அமைச்சர் அபுயூசுப்


(12ஆம் பக்கம் பார்க்க)


### பூர்வாங்கத்திற்கு 'கராட்டே'

ஜனாதிபதி பிரேமதாசாவின் தெரிவு செல்லுபடியாகாது என எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்கா நீதி மன்றத்தில் தாக்கல் செய்த மனுவை எதிர்த்து, ஜனாதிபதியின் சார்பில் எழுப்பப்பட்ட பூர்வாங்க ஆட்சேபனை, உயர் நீதி மன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

## புரிந்துணர்வின் ஆரம்பம்

'புரிந்துணர்வுகளுக்கான கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. இதனால் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படை போடப்பட்டுள்ளது' என இலங்கை அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஜனாதிபதியின் செயலகத்தில் இருந்து உத்தியோக பூர்வமான செய்தி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அடுத்தகட்டப் பேச்சுக்கள் பற்றிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

### வெங்காயத்தனம்

பழைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலிக்கு புதிய, வினோத ஆலோசனை தோன்றியுள்ளது.

'பம்பாய்' வெங்காயம், 'மைசூர்' பருப்பு ஆகியவற்றிற்கு பெயர் மாற்றுவதால் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம் என நினைக்கும் 'வெங்காய' அமைச்சர் லலித்தைப்பற்றி என்ன சொல்லலாம்?





'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

# திசை
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 200/–
அரைவருடம்–ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/–
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


# மினி பஸ்களா? மரணத் தூதர்களா?

இணுவிலில் பாதையோரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தவர்களை மினிபஸ் மோதியதில் 7 வயதுச் சிறுமியொருத்தி மரணமடைந்ததுடன் மேலும் இரண்டு பெண்கள் காயத்துக்குள்ளாகினர்; மோதிய மினி பஸ் ஓடிமறைந்து விட்டது. இந்தச் செய்தியினை யாழ்ப்பாணத் தினசரி யொன்றில் (30-5-89) பார்த்தேன். இவ்வாறான மினிபஸ் மோதும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுகின்றன. இதற்குச் சில காரணங்களை ஊகிக்கலாம்.

1) ஏனைய பயணிகள் வாகனங்களைத் தாம் முந்திச் சென்று பயணிகளை ஏற்றிச்செல்ல அவசரப்படுவது.
2) ஓட்டுநர்கள் தம்மைக் கதாநாயகர் (ஹீரோ) போல் பாவனைகாட்ட முயல்வது.
3) போதிய பயிற்சியும், திறமையும் இல்லாதவர்கள் ஓட்டுநர்களாக இருப்பது.

இதனால் அநியாயமான உயிரிழப்புகளும், உடல் பாதிப்புகளும் ஏற்படுகின்றன. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய அதிகார சக்திகள் இவற்றை நிறுத்த முயல்வார்களா? மினிபஸ் சங்கங்கள் பொறுப்பில்லாத இச்செயல்களை உடன் நிற்பாட்ட முன்வர வேண்டும். இல்லையென்றால், பொது மக்கள் அசட்டையாக இருக்காது, பொறுப்பில்லாமல் நடந்து கொள்ளும் அத்தகைய மினி பஸ்காரருக்குப் பாடம் புகட்ட வேண்டும்; மினிபஸ்கள் தொடர்ந்தும் 'மரண தூதர்களாவதை' அனுமதிக்கக்கூடாது.

— தி. ஆனந்தன்
கோவில்வீதி, யாழ்ப்பாணம்.



## வட - கிழக்கு கரையோரப் பாதை

விடாக்கண்டன் எழுதிய வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் கரையோரப்பாதை தொடர்பான கட்டுரை மிகவும் வரவேற்கத்தக்கதாகவும், சிறப்புமிக்கதாகவும் உள்ளது. இந்த விடயத்திலும் 'திசை' தனது கடமையைப் பூரணப்படுத்தவேண்டும் என்று கோருகின்றேன். ஏனெனில் இது காலங்காலமாக உள்ள குறைபாடாகவும், தமிழ்த்தேசிய இனத்தைப் பலவீனப்படுத்துவதாகவும் உள்ளது. எனவே காலங்காலமாக தமிழ்த் தேசியத் தலைவர்களாக நின்றவர் விட்ட தவறை இனிமேலாவது தீர்க்கவேண்டும். அதற்கான நடவடிக்கையை திசையே நிறைவேற்றவேண்டும்.

— தி. சாந்தினி
கொக்குவில்.

## ஹன்டி பற்றிய கட்டுரை

ஹன்டி பேரின்பநாயகம் என்பவரின் நினைவாக வெளியிட்ட கட்டுரையில் இருந்து தமிழ் மக்களுக்காக சேவை செய்ய இப்படி ஓர் மகான் முன்னுளில் இருந்துள்ளாரென்பதையிட்டு, இன்றைய நிலையுடன் ஒப்பிடுகின்றேன். அக்கட்டுரைமூலம் நிறையவிடயங்களைத் தெளிவுபடுத்தினேன்.

ஜே. கே. பற்றிய நோக்கு ஒருவிதமான மாயையை ஏற்படுத்துகின்றது. காரணம் ஜே. கே. பற்றி அறிந்தது ஆழமாக இல்லை. அவர் பற்றி, அவரது தத்துவ ஞானம் பற்றி வேறு கட்டுரைகளைப் பிரசுரிக்கவும். என்போன்ற பலபேருக்கு பெரும் உதவியாக இருக்கும்.

— கார்த்திகா பாலா
முடக்காடு, கரவெட்டி.

மதிப்புக்களுடன்:

திசையின் வளர்ச்சியினை அதன் தரம்பேணும் வகையிலும், வாசகர் தேடும் ஆர்வ விருப்பிலும் காணமுடிகிறது' குறுகிய காலத்தில் பரந்த அறிமுகத்துடன், குறிப்பாக கிழக்கு மாகாணம் வரையான தொடர்புகளுடன் சிருஷ்டிப்புக்களையும் பயன்மிக்க கட்டுரைகளையும் தாங்கி வெளிவருகின்றது.

கடந்தகால அரசியல் குளறுபடிகளை தற்போதைய தாக்கங்களை நாளைய வரலாற்றுக்கு ஆவணமாக்கவும் உதவுகின்றது. முயற்சி தொடரட்டும், நம் பங்களிப்பு என்றென்றைக்கும் உண்டு.

— எஸ். கருணாகரன்
இயக்கச்சி.

## பிழை திருத்தம்

சென்ற வாரத் திசையில் வெளிவந்த 'தமிழ்ப்பேரினவாதம்'' என்ற ஆசிரியர் தலையங்கத்தில் 1,24000 எமது இன மக்களைப் பலி கொடுத்துள்ளோம்' என்பது 1,24,000 எமது இன மக்களை அகதிகளாக்கியும் ஆயிரக்கணக்கானோரை பலிகொடுத்தும் உள்ளோம் என்றிருக்க வேண்டும். 'உருளும் உலகப்' பகுதியில் இடம் பெற்ற "சீன சோவியத் உறவு'' என்ற கட்டுரையில் 'அமெரிக்கா தலைமையிலான சோஷலிஸ அணி' என்றிருப்பது 'அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அணி யென்றிருக்க வேண்டும்

— ஆர்.

# 1981 ஜூன் 1 பண்பாட்டுப் படுகொலை!

அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்மக்களின் பண்பாடுகளின் அதி உச்சக்கட்ட வெளிக்காட்டலாய் பொதுசன நூலகம் 1981 ஜூன் 1 இல் எரித்து நாசமாக்கப்பட்டது. கொடூர்மிக்க இந் நிகழ்வின் அரசியல் பின்னணிகளை யாவரும் அறிவர். ஆனால் இழந்த நூலகத்தை மீள எவரால் தான் கட்டியெழுப்பிட முடியும்? கட்டிடத்தைத்தான் 'புனருத்தாரனம்' என்றவகையில் கட்டலால். ஆனால் எரிந்துபோன அரிய கிடைக்கப் பெறுக நூல்களை, சுவடிகளை எவ்வண்ணம் பெறலாம்?

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது யாழ். பொதுசன நூலகம். அத்துடன் சர்வதேச நூலக மட்டங்களுடனும்யாழ், பொதுசன நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம்போன்றும் யாழ். நூலகம் செயற்பட்டுவந்தது.

"நூலக காங்கிரஸ்" இலும் யாழ். நூலகம் அங்கத்துவம் வகித்தது. இலங்கையிலிருந்து வெளியிடப்படும் சஞ்சிகைகள் நூல்கள் இந்நூலகத்தினூடாகவே வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

வரலாற்றுப் புகழ் வாய்ந்த யாழ். நூலகத்தின் சிறப்பான சிற்ப அமைப்புக் கட்டிடத்தை கட்டுவிக்க தனிநாயகம் அடிகளார், வணக்கத்துக்குரிய லோங் அடிகள் போன்றோர் முதன்மையாயிருந்தனர். யாழ். நூலகம் சிறப்பாக நடைமுறையிற் செயற்பட நூலகத்தை மாநகரசபை பொறுப்பேற்றுக் கொண்டது.

சர்வதேச நூலகவியல் சங்கம் (World Organisations of Libraries) யாழ். நூலகத்துடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்தது. இதனூடாக வெளிநாட்டு நூல்கள் தாராளமாக இங்கு கிடைக்கப் பெற்றன. பிரிட்டிஸ் கவுன்சில் நூலகத்தின் கொழும்புக் கிளையிலிருந்து வருடாந்தம் பல நூல்கள் யாழ். நூலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. இவை மாத்திரமன்றி சர்வதேசம் பூராக யாழ். நூலகத்துக்கு உதவிகளை வழங்கி வந்தன. ஆசியா பவுண்டேசன் (Asia Foundation), போருட் (Forut) நெராட் (Norud) போன்றன இவற்றுட் சில நிறுவனங்களாகும்.

ஐங்கரன்

தமிழ்பேசும் மக்களின் அறிவுக் களஞ்சியமாக விளங்கிய யாழ். நூலகம் மேல் மேலும் வளர்ந்து வருவதை இனவாதிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

1958 இலும், 1977 இலும் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. ஆயினும் அறிவாற்றலை அழித்தொழிக்க சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருந்த இனவாதிகளுக்கு 1981 மே 31 நல்ல முகூர்த்தத்தைக் கொடுத்து மாவட்ட சபைகளுக்காகவும் உள்ளுராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் காலமாக 1981 மே விளங்கியது. ஜூன் 5 இல் தேர்தல் நாளாகும். இதற்காக ஐ. தே. கட்சிக்கும் பிரச்சாரம் செய்ய காமினி திசநாயகாவும், வேறு அமைச்சர்களும் அரசின் அதிகாரிகளும் யாழ். வந்திருந்தனர். இவர்களின் முன்னிலையிலேயே யாழ் நகரம் மீண்டும் எரிந்தது. நாச்சிமார் கோயிலடியில் நடந்த துப்பாக்கிச் சமரில் 3 பொலிசார் இறந்ததையடுத்து பொலிசாராலும், அரசின் காடையராலும் யாழ். நகரம் எரிக்கப்பட்டது. இவ்வேளையிலேயே யாழ். நூலகமும் தீக்கு இரையானது.

இச் செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்டசெயலாகவே அமைந்தன. யாழ். எம்பியின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகரவர்த்தக நிலையங்கள், த. வி. கூ. அலுவலகம், பொதுசன நூலகம், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்காலவேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இவ் எரிபபுகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ்பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்,

இக்கொடூர நூலக எரிப்பினைப் பொறுத்துக் கொள்ள முடியாது. தாவீது அடிகளார் துயரத்துடன் சில நாட்களில் மரணமானார். சர்வதேச நாடுகள் பூராக அரசின் கொடூரச் செயலை வன்மையாகக்கண்டித்தன. வரலாற்றுப் படுகொலையாக நிகழ்ந்த அறிவாலய இழப்பினை பூசிமெழுக அரசு விசாரணை, புனருத்தாரனம் என்று பறைசாற்றியது. ஆனால் இதுவரை எவையுமே நிகழவில்லை. இழந்த நூலகத்தை மீளக்கட்டியெழுப்பிட அனைவரும் தோள்கொடுப்போமாக□

## கி. ஆ. பெ. க்கு இருட்டடிப்பு?

தமிழ்நாட்டின் பிரபல இலக்கிய அறிஞரான திரு கி. ஆ. பெ. விஸ்வநாதன் அவர்கள் அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தது தெரிந்ததே. ஆனால் இவர் விஜயத்தைப்பற்றி கொழும்பில் உள்ள இலக்கிய அமைப்பு எதுவும் எந்தவித அக்கறைப் படாது மௌனமாக இருந்தது இப்போ அங்குள்ள பல இலக்கியவாதிகளிடையே ஐயத்தை ஏற்படுத்தியுள்ளதாக செய்திகள் அடிபடுகின்றன.

இதற்குரிய காரணம் இவர் கொழும்பு வந்து இறங்கியதும் விமான நிலையத்தில் வெளியிட்ட அரசியல் கருத்துக்களே என்று கூறப்படுகிறது. தலைநகரில் உள்ள இலக்கிய அமைப்புகள் யாவும் அரசு என்ன வர்ணத்தைப் பூசிக் கொள்கிறதோ அதற்கேற்ப தாமும் நிறம் மாறிக்கொள்ளும், சுபாவமும் உடையனவாகவும் இடைக்கிடை சந்தர்ப்பத்துக்கேற்றவாறு "முற்போக்கு" "தீவிரம்" என்ற சொற்களைப் பாவிப்பனவாகவும் இருப்பதால் கி. ஆ. பெ. யின் கருத்துகள் இவைக்கு கசப்பை தந்திருக்கலாம் என்றும் கொழும்பு இலக்கிய வட்டாரங்களில் சொல்லப்பட்டன.


அமெரிக்கா, ஜேர்மனி,
பிரான்ஸ், கனடா, லண்டன்,
போன்ற நாடுகளுக்கு
செல்ல விரும்புகின்றவர்கள்

பாஃரேன் (Bahrain)
உடனடி வேலைவாய்ப்பு

தொழிலாளர் (கூலியாட்கள்), மேசன், தச்சு வேலையாளர், டீசல் – பெற்றோல் மெக்கானிக், ஓட்டோ எலக்ரிசன், எலக்ரிசன்ஸ் (வீட்டு வயரிங்) முதலியவற்றிற்கு
உடனடியாக ஆட்கள்
தேவை

சாப்பாடு, இருப்பிடவசதி
இலவசம்

**V. T. R. TRAVELS**
41, 3rd Cross Street,
JAFFNA.

A—10

# பெண்களுக்கெதிரான வன்முறை — பலாத்காரம்



பெண்களுக்கெதிரான வன்முறையின் ஒரு மோசமான வடிவம் பலாத்காரம் ஆகும். தனி நபர்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக பெண்களுக்கு இக்குற்றத்தை இழைக்கின்றனர். இதே சமயம் சமூகத்தில் முக்கியமான ஒரு அடக்குமுறைத் தந்திரோபாயமாகவும் இது கையாளப்பட்டு வந்துள்ளது. போர்கள் படையெடுப்புகள், சாதி, இன வன்செயல்களின் போதும் பெண்கள் அதிக அளவில் பலியாகின்றனர். அமெரிக்க—வியட்நாம் யுத்தம், பங்களாதேஷில் பாகிஸ்தானின் படையெடுப்பு, லெபனன் உள்நாட்டு யுத்தம் முதலியவை உதாரணங்கள். இலங்கையில் தமிழருக்கெதிரான இன வன்செயல்களின் போதும் இராணுவ அத்துமீறல்களின் போதும் பெண்களுக்கெதிரான இவ் வன்முறை அதிக அளவில் நிகழ்ந்துள்ளது; நிகழ்கிறது.

எத்தகைய சந்தர்ப்பத்தில் பலாத்காரம் நடைபெற்றாலும் அதனைத் தனிப்பட்ட அவமானமாகவும் மானக்கேடாகவும் எமது சமூகம் நோக்குகிறது. இவ்விடயம் பற்றி பலதரத்திலுள்ள பெண்களுடனும் உரையாடியபோது அவர்களிற் பெரும்பாலோர் இதனைப் பெண்ணின் வாழ்நாள் முழுவதும் மறையாத வடுவாகவும் தனிப்பட்ட அவமானமாகவும் கருதியதை உணர முடிந்தது. ஒரு தாய் கூறினாள்: ''எனது மகளுக்கு மட்டும் இப்படி நடந்தால் நானே அவளைக் கிணற்றில் தள்ளி விடுவேன்''

எத்தகைய நிலைமைகளில் பலாத்காரம் நடைபெற்றாலும் அது பற்றித் தகவல் தருவதற்கு எவரும் இலகுவில் முன் வருவதில்லை. தாமாகவே முன் வந்து முறைப்பாடு செய்த பெண்களைப் பற்றி பலரும் இழிவாகப் பேசியதையும், அவர்களில் பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சுமத்தியதையும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடிந்தது. பெண்களுக்கு எதிரான இவ்வன்செயலுக்குப் பெண்களே காரணம் என்று கூடச் சிலர் வாதிடுகின்றனர். பெண்களே தமது நடவடிக்கைகளால் இராணுவத்தினரையோ, ஆண்களையோ பலாத்காரத்திற்குத் தூண்டுகின்றனர் என்பதும் ஒரு குற்றச்சாட்டாகும். குறிப்பிட்ட ஒரு பலாத்காரச் சம்பவத்தின்போது பெண் முறைப்படி ஆடை அணிந்திருக்கவில்லை; அதனாலேயே அப்படி நடந்தது என்றும் சிலர் கூறினர்.

பலாத்காரம் தொடர்பான எமது சமூகக் கருத்தோட்டங்களையும் அபிப்பிராயங்களையும் நோக்கும் போது நாம் பின்வரும் போக்குகளைக் காணலாம்.

1. பெண்களைப் பலாத்காரம் செய்வது இழிந்தது, அநீதியானது எனக் கருதப்பட்டாலும், பலாத்காரம் செய்தவரைவிட அதற்கு உட்பட்ட பெண்ணே மிக மோசமாகப் பலவகையில் பாதிக்கப்படுகிறாள். அவை,

அ) எந்தச் சூழ்நிலையில் பலாத்காரம் நிகழ்ந்தாலும் அப்பாவிப் பெண், சமூகத்தின் அவமதிப்புக்கு ஆளாகவேண்டியுள்ளது.

சித்ரா

ஆ) திருமணஞ் செய்யாத பெண்ணாயின் அவளது திருமண வாய்ப்புகள் குறைகின்றன.

இ) திருமணமான பெண்ணானால் கணவன் மனைவி உறவில் நெருடல் ஏற்படுகிறது.

2. பெண்ணே தனது நடவடிக்கையால் பலாத்காரத்தைத் தூண்டுகிறாள்.

3. இன வன்செயல், இராணுவ நடவடிக்கைகள் முதலியவற்றின் போது மானபங்கப் படுத்தப்பட்ட பெண்களை தியாக சிந்தையுள்ள இளைஞர்கள் மணந்து கொள்ள முன்வரவேண்டும். (இது 'முற்போக்கான' எண்ணம் கொண்டவர்களது கருத்தாகும்)

இவற்றை நோக்கும்போது உணர்ச்சி பொதிந்த இந்த விடயம் பற்றித் தீர ஆலோசிப்பதும் மேற்கூறிய கருத்துக்களின் சரி பிழை பற்றி ஆராய்வதும் இவ்விடயம் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாகச் சரியான நிலைப்பாடு எடுப்பதும் அவசியமானதாகும்.

இதற்கு முன்னர் ஒரு விடயத்தை அழுத்தமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். இராணுவத்தினர் தமிழ்ப் பெண்களைப் பலாத்காரம் செய்யத் தொடங்கிய பின்னரே பலரும் இதுபற்றிப் பேசத் தொடங்கியுள்ளனர். ஆனால் இதற்கு முன்னரே எத்தனையோ பெண்கள் இக்குற்றத்திற்கு இரையாகியுள்ளனர். பெரும்பாலும் இந்நிலை பகிரங்கமாகப் பேசப்படவோ எதிர்க்கப்படவோ இல்லை. எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்செயல்களின் மிக மோசமான வடிவமாக இது நிலவிவந்துள்ளது. பலாத்கார வழக்குகளும் பெண்கடத்து வழக்குகளும் நாம் அறியாதவையல்ல. வீதிகளிற் பெண்களிடம் சேட்டை புரிவது; தகாத வார்த்தைகளைப் பேசுவது என்பவற்றிலிருந்து, அபலைகளான பெண்களைப் பலாத்காரம் புரிவது வரையிலான பல்வேறு வன்செயல்கள் எமது சமூகத்திற்குள்ளேயே நிகழ்வதை, எவராலும் மறுக்கமுடியாது. பெண்கள் மௌனமாக இந்த இம்சைகட்கு உட்பட்டே வந்துள்ளனர்.

இவ்வாறு கூறுவது இராணுவத்தினரின் செயலை நியாயப்படுத்தவல்ல; மாறாகப் பெண்களுக்கு எதிரான வன்செயலாகப் பலாத்காரம் எப்போதும் நிகழ்ந்து வந்துள்ளது என்பதை வலியுறுத்தவும், அவ்வாறு நிகழ்ந்தாலும் இது எதிர்க்கப்படவோ, பெண்களுக்கெதிரான வன்செயல் எனக் கூறப்படவோ இல்லை என்பதைச் சுட்டிக்காட்டவும் ஆகும்.

எவ்வாறாயினும் இன்று இந்த விடயம் பல்வேறு காரணங்களால் அரசியற் பரிமாணத்தைப் பெற்று விட்டதாலும், மனித உரிமை மீறல்களில் ஒன்றாகக் கணிக்கப்படுவதாலும், பெண்கள் அமைப்புகள் இது பற்றி எதிர்ப்புக் குரல் காட்டத் தொடங்கியதாலும் இது பற்றிய தெளிவான சிந்தனை அவசியமாகிறது. இதற்கு மேலாக எமது சமூகத்தில் நிலவும் பெண்ணொடுக்குமுறைக் கருத்துகளால் வழிநடத்தப்படும் பெண்கள் பலாத்காரத்திற்கு உள்ளாகும் போது, தாம் 'கற்'பிழந்து விட்டதாக உண்மையாகவே எண்ணி தமது உயிரை மாய்த்துக் கொள்ள முனைவதாலும் தாழ்வுச் சிக்கலுக்கு ஆளாவதாலும் பலாத்காரம் 'கற்பு' ஆகியவை பற்றிய உண்மையை சமூகத்திற்குக் குறிப்பாகப் பெண்களுக்குத் தெளிவுறுத்துவது அவசியம்.




தந்தை வழிச் சமூகத்தினதும், ஆண் மேலாதிக்கத்தினதும் ஒரு புருஷ மணமுறையினதும், தத்துவார்த்தக் கோட்பாடாகவே 'கற்பு' என்ற கருத்துருவம் தமிழ்ச் சமூகத்தில் தோற்றம் பெற்றது என்பது சமூக வரலாறு எமக்குத் தரும் செய்தியாகும். சமூகவியல், மானுடவியல் அறிவினையும் ஆராய்ச்சியையும் மனித குல நாகரிக வளர்ச்சியைப் புரிந்துகொள்ளப் பிரயோகிக்கும் போது இந்த விளக்கம் ஏற்படுகிறது. தமிழ்ச் சமூகத்தில் மாத்திரமல்ல, ஐரோப்பிய நாடுகளிலும் அரச குலத்தினர், பிரபு வர்க்கத்தினர் மிக இறுக்கமான கற்புக்கோட்பாடுகளுக்குள் பெண்களை உட்படுத்தியுள்ளனர். இன்று நிலவும் ஒரு புருஷமண முறை வரலாற்றின் ஒரு கட்டத்தில் உருவானதே தவிர அது என்றென்றைக்கும் நிரந்தரமான வடிவமாக இருக்கவில்லை. மனித வரலாற்றை எடுத்து நோக்கும்போது பலவிதமான மணமுறைகளும் குடும்ப வடிவங்களும் நிலவியதைக் காணலாம். ஆண்கள் — பெண்களுக்கிடையே வரையறையற்ற புணர்ச்சி நிலவிய ஆதிக்கட்டத்திலிருந்து இரத்த உறவுக் குடும்பம், குழு மணக்குடும்பம் இணை மணக் குடும்பம் என்று பல கட்டங்களைக் கடந்த பின்னர்தான் ஒரு புருஷ மணக் குடும்பம் உருவாகியது. ஒரு புருஷ மணக் குடும்பம் உருவாக முன்னர் நிலவிய குடும்ப வடிவங்களில் ஆண் ஒரு பெண் மீது தனது முழு அதிகாரத்தை நிலைநாட்டவோ அல்லது தனது சொத்துக்கு உரிமையாகப் போகும் வாரிசு பற்றி நிச்சயம் கொள்வதற்கோ இடமிருக்கவில்லை. தனிச் சொத்துரிமையும் ஆண் ஆதிக்கமும் வளர்ந்ததுடன் இந்த அம்சங்கள் தேவையாகின. ஒரு புருஷ மண முறை இதற்கான வாய்ப்பை அளித்தது. எனவே ஒரு புருஷ மணம், ஆண், பெண்ணினது பாலியலை முற்றுமாகக் கட்டுப்படுத்துதலுக்கு இடமளித்ததுடன் கற்பு போன்ற கருத்துக்கள் சிறப்பிக்கப்பட்டு இலட்சியமாக்கப்படவும் வழிவகுத்தது. இந்த மேன்மைப் படுத்தப்பட்ட இலட்சியங்களுக்குப் பின்னால் ஆண்களின் அப்பட்டமான ஆதிக்க உணர்வுதான் உள்ளது. ஒரு புருஷ மண முறை குறித்து பிரடரிக் ஏங்கல்ஸ் தமது குடும்பம், தனிச் சொத்துடைமை அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலில் பின்வருமாறு கூறினார்: ''அது ஆணின் மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டது; அதன் தெளிவான நோக்கம் விவாதத்திற்கிடமில்லாத தந்தை முறையுள்ள குழந்தைகளைப் பெறுவதுதான்... இயற்கையான நிலைமைகளை அடிப்படையாகக் கொள்ளாமல் பொருளாதார நிலைமைகளை — அதாவது ஆதிகால, இயற்கையாக வளர்ந்த பொதுச் சொத்தின் மீது தனியுடைமை வெற்றி பெற்றிருந்த நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்த முதல் குடும்ப வடிவம் அது''.




எனவே, ஒரு புருஷ மணமுறையினதும் அதனுடன் தொடர்புபட்ட 'கற்பு' என்ற கோட்பாட்டினதும் தோற்றம் இவ்வாறுதான் அமைந்தது. இங்கு மீண்டும் ஏங்கல்ஸின் வாசகங்கள் நினைவு கூரத்தக்கவை:

(தொடர்ச்சி அடுத்த வாரம்)

# மலேரியாவுக்குச் சீன மருந்து

இஸ்ரீவ் அஸ்டின்

மலேரியாவுக்கான கை மருந்தாக உபயோகிக்கப்பட்டவற்றிலிருந்து புதியதொரு மருந்தை சீன வைத்தியரொருவர் கண்டுபிடித்துள்ளார். குயினைன் போன்ற மருந்துகளால் வருவது போன்ற பக்க விளைவுகள் இந்த மருந்தால் வருவதேயில்லை. மலேரியா நோய்பற்றி அதிகம் அறிந்து கொள்வதற்காக வைத்தியர் லீ திட்டமிட்டு ஐந்து தடவைகள் மலேரியா நோய்க்குத் தன்னை உட்படுத்தினார். சீன தேச வைத்தியக் கல்லூரியின் பிரதி அதிபதியாகப் பணிபுரியும் வைத்தியர் லீ தனது சீவியத்தின் அதிகமான வருடங்களை மலேரியா பற்றிய ஆராய்ச்சிக்காகவே அர்ப்பணித்துள்ளார். இதற்காக தனது நேரங்களையெல்லாம் கய்னன்தீவில் மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் செய்வதிலேயே செலவழித்தார். ஆபிரிக்க நாட்டில் மட்டும் வருடா வருடம் 300 மில்லியன் மக்களைத் தாக்கி, ஒரு மில்லியன் மக்களைக் கொன்று குவிக்கும் மலேரியா நோய்பற்றி அவரது ஆராய்ச்சிகள் புதுக்கருத்துக்களை வெளிக் கொணர்ந்துள்ளன — இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் அவரது உயிரைப் பணயமாக வைத்தே செய்யப்பட்டன.

உலகின் பல பகுதிகளில், குறிப்பாக இந்தியாவிலும், தென்கிழக்காசியாவிலும் மலேரியா நுளம்புகள் கிருமிநாசினிகளுக்குத் தாக்குப்பிடிக்கவல்ல சக்தி கொண்டனவாக பரிணமம் அடைந்துள்ளன — அத்துடன் மலேரியா நோய் காவு கிருமிகள், குயினைன் போன்ற பரந்த அளவில் உபயோகிக்கப்படும் மருந்துகளுக்குத் தாக்குப்பிடிக்க வல்லனவாக வளர்ந்து பெருகிவிட்டன.

குலோரோகுயின் என்ற மருந்துக்கு கொலம்பிய நாட்டு மலேரியா நோய்காவிகள் தாக்குப்பிடிக்கவல்லனவாய் விட்டன என்று அறிக்கையிடப்பட்டு ஆறு வருடங்களின் பின், சீன விஞ்ஞானிகள் மலேரியாவுக்கான புதிய மருந்தைக் கண்டுபிடிக்கும் தேடலில் 1967 ஆம் ஆண்டு தொடக்கம் ஈடுபட்டனர். வைத்தியர் லீ அவர்கள் தென்சீன நாட்டுக் காடு, மேடுகளெல்லாம் திரிந்து முன்னேற்றமடையாத கிராமத்து மக்களுக்கெல்லாம் பரிகாரம் செய்தார்.

1981 ஆம் ஆண்டுக் கோடை காலத்தில் வேண்டுமென்றே மலேரியா நோய்க்குத் தன்னை உட்படுத்திய வைத்தியர் லீ அவர்கள் நான்கு நாட்கள் மருந்தெதுவும் உட்கொள்ளாது வருத்தத்தை உணர்ந்து பார்த்தார். மலேரியா காவிகள் அவரது செங்குருதிக் கலங்களைத்தாக்கி, அவரது அங்கங்களையும், அவயங்களையும் பழுதடையச் செய்ததில், மலேரியாக் காவிகளின் வாழ்க்கைச் சரிதத்து, இனவிருத்திப்படலம் நடைபெறும் பகுதியில் முன்பு நம்பப்பட்டதுபோல் ஒருமுறை அல்ல, இருமுறை குளிப்பன் காய்ச்சல் வரும் என்பதை அனுபவித்து, உணர்ந்து உலகுக்கு அறியத் தந்தார். இந்தக் கண்டுபிடிப்பு, மலேரியாவுக்கு சிறந்த முறையில் பரிகாரம் செய்வதற்கு உதவுகின்றது.

வைத்தியர் லீ அவர்களும், மற்றும் மருந்தியல் ஆராய்ச்சியாளர்களும் பழம்பெரும் சீன வைத்திய வாகடங்களை வாபித்தும், சுதேச வைத்தியர்களுடன் கலந்தாலோசித்தும், நாட்டு வைத்திய லிபரங்களைத் திரட்டி சீன மூலிகைகளிலிருந்து மலேரியாவுக்கான மருந்து கண்டுபிடிப்பதில் ஈடுபட்டனர். அவர்கள் நூற்றுக் கணக்கான மூலிகை மருந்து வகையறுக்களை பரிசோதித்துப் பார்த்தும், நல்ல முடிவுகள் எதுவும் கிட்டவேயில்லை.

முன்னொரு காலத்தில் மூலிகை மரமொன்றிலிருந்து கிடைக்கும் இயற்கை வளம், மலேரியா மருந்தாக பரவலாக உபயோகிக்கப்பட்டது. 16ஆம் நூற்றுண்டில், பேரு நாட்டவர், கிறிஸ்தவ பாதிரிமாருக்குச் சின்கோனு மரப்பட்டைகளின் குண இயல்புகள் பற்றி அறிவூட்டினர்கள், 1834 இல் பிரான்சைச் சேர்ந்த இரசாயன அறிவியலாளரான பெலரியர் குயினையினை சின்கோனு பட்டைகளிலிருந்து பிரித்தெடுத்தும், குயினையினே மலேரியாவுக்கான பிரதான மருந்தாக, 1930-களில் செயற்கை இரசாயனத் தயாரிப்பான குலோரோகுயின் கண்டுபிடிக்கும் வரை விளங்கியது. கடந்த 20 ஆண்டுகளில் பல்வேறு செயற்கை மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கி. பி. நாலாம் நூற்றுண்டில் சீனவைத்திய ஏடுகளிலிருந்து மலேரியா மருந்து தயாரிப்பதற்கான கருவூலங்களைச் சீன ஆராய்ச்சியாளர்கள் அறிந்துகொண்டதும், மூலிகைகளிலிருந்து மருந்தைப் பிரித்தெடுப்பதில் 1972 ஆம் ஆண்டில் வெற்றி கண்டனர். வாஷிங்டனிலுள்ள உவால்ரர்ரீட் ஆராய்ச்சி நிறுவனத்தில் 1973 இல்தான் அமெரிக்க அறிவியலாளர்கள் இதுபோன்ற மருந்தைப் பிரித்தெடுத்தனர்.

வைத்தியர் லீயின் குழுவினரால் பச்சைமூலிகை நிவாரணி எனப் பெயரிடப்பட்டுள்ள இப்புதுமருந்து இரசாயன சஞ்சிகைகளில் 'ஆர்ரிமிசினின்' எனப் பரவலாக எடுத்தாளப்பட்டுள்ளது. குயினைன் சார்ந்த மருந்துகளிலிருந்து இந்த மருந்து வேறுபட்ட இரசாயனக் குண இயல்புகளைக் கொண்டுள்ளதால், மலேரியாத் தடுப்புக்கான மருத்துவத்துக்குப் புதுப்பொலிவூட்டியுள்ளது. விரைவிற் செயற்படவல்ல நச்சுத் தன்மையற்ற குயினையினைப் போன்றே செயற்பட வல்லது இப்புது மருந்தென சீனப் பரிசோதனைகள் எடுத்தியம்புகின்றன.

குயினையின் போன்ற மருந்துகள் பாரதூரமான பக்கவிளைவுகளைத் தருவன என அறியப்பட்டுள்ளதால், நச்சுத் தன்மையற்ற இந்தப் புது மருந்து மிகமுக்கியமானது. மேலும், வழமையான மருந்துகளைவிட இந்த மருந்து எல்லாவிதமான மலேரியாக் காய்ச்சல்களையும் கட்டுப்படுத்தவல்லது. இது உடனடியாகவே செயற்படத் தொடங்கி விடுவதால், மலேரியாவால் பாதிக்கப்பட்டவர்களின் மூளை தாக்கப்பட்டு மரணிப்பதிலிருந்து காப்பாற்றவும் உதவுகிறது. ஒரு சந்தர்ப்பத்தில், மலேரியாவால் மூளை பாதிப்படைந்தவர்களில் 90% ஆனவர்களைக் குணமடையச் செய்ததுடன், அவர்களின் மயக்கநிலைக் காலப்பகுதியை 49 மணித்தியாலங்களில் இருந்து 12 மணித்தியாலங்களாக குறைக்கவும் உதவியது.

இந்தப் புது மருந்து மிக விரைவாக உடம்பிலிருந்து வெளியேற்றப்பட்டு விடுமென்பதால் மலேரியா நோயை முற்றாகக் கட்டுப்படுத்த இந்தப் புதுமருந்துகளுடன், வேறு மருந்துகளும் உபயோகிப்பதே புத்திசாலித் தனமானதெனப் பலர் கருத்து வெளியிட்ட போதும், உஷ்ணவலயப் பிரதேசங்களில் மக்களை கொடூர வதைக்குள்ளாக்கும் மலேரியா நோயிலிருந்து மக்களைக் காப்பாற்ற நாளும், பொழுதும் உழைக்கும் வைத்தியர் லீ இன்று சீன நாட்டின் ஒரு தேசிய வீரரே.

(ஏத்ஸ்கான்.) □




# உராய்வை வெல்ல

பி. நடராசன்

தார் போடாத மண் வீதியிலே வேகமாகச் சென்று கொண்டிருக்கும் மோட்டார் வண்டி சேறுன பகுதிக்கு வந்ததும் அசையாமல் நின்றுவிடுகிறது. ஆனல், அதன் சில்லுகள் நின்ற இடத்திலேயே சுழன்று கொண்டிருக்கின்றன. தரையிலே உருட்டி விடும் பந்து சிறிது நேரத்தின் பின் உருளாது நின்றுவிடுகிறது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் உராய்வு என்ற தோற்றப்பாடு காரணமாகிறது.

முதலாவது நிகழ்ச்சியில் மோட்டார் வண்டியின் சில்லுக்கும் தரைக்குமிடையே உராய்வு மிகவும் குறைந்துவிடுவதால் இயக்கம் தடைப்பட்டது. இரண்டாவது நிகழ்ச்சியில் அசையும்பந்தின் விசைக்கு எதிராக உராய்வு விசை தொழிற்படுவதால், பந்தின் வேகம் படிப்படியாகக் குறைந்துவிடுகிறது.

கப்பியினுல் நீர் இறைக்கும் போது கப்பி சுழல்கிறது. கப்பி துருப்பிடித்து, உலர்ந்த நிலையில் இருந்தால் அதனைப் பயன்படுத்திக் கிணற்றிலிருந்து நீரை இழுப்பது கடினமாகும். ஆனல், அதற்கு எண்ணெய் அல்லது எண்ணெய்ப் பசை (கிறீசு) இட்டால் நீர் இறைப்பது எளிதாகும். எண்ணெய்ப் பசை, எண்ணெய், காரீயம், சில், குண்டுப்போதிகை, உருளிப் போதிகை முதலியவை பரப்புக்களிடையேயுள்ள உராய்வைக் குறைக்கின்றன.

ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருக்கும் இரு மேற்பரப்புக்களுள் ஒன்று இயங்கும் போது அதன் இயக்கத்தைத் தடுக்கும் வகையில் தாக்கும் விசை, உராய்வு எனப்படுகிறது.

வேலையை எளிதாக்க உதவும் பொறிகளின் பகுதிகள் ஒன்றையொன்று தொட்டுக் கொண்டிருக்கும். அவை இயங்கும் போது உராய்வுவிசை தொழிற்படுகிறது. பொறிகளைக் கொண்டு வேலை செய்யும் போது உராய்வு விசையை வெற்றிகொள்ளவும் வேலை செய்யவேண்டியுள்ளது. இதற்காகவும் மேலதிக சக்தி செலவாகிறது. உராய்வினுல் பொறிகளின் வினைத்திறன் குறைகின்றது. அது மட்டுமல்லாமல் தேய்வும் ஏற்படுகிறது.

எவ்வளவு தான் பரப்புக்களை அழுத்தமாகச் (Smooth) செய்தாலும் உராய்வு நோக்கில் அவை கரடு முரடாக, மேடும் பள்ளமும் உடையவைவாகவே அமையும். மேற்பரப்புகளில் உள்ள இக்குறைபாட்டைப் போக்கி, மிக உயர்ந்த அழுத்தத்தன்மையை ஏற்படுத்த எண்ணெய், எண்ணெய்ப்பசை, காரீயம் முதலியன உதவுகின்றன. இம் முறைகளால் உராய்வை இழிவு (Minimum) அளவுக்குக் குறைக்க முடியுமே தவிர முற்ருக இல்லாமற் செய்து விட முடியாது.

சோவியத்து நாட்டு விஞ்ஞானிகள் உராய்வை நீக்கும் நவீன முறை ஒன்றைக் கண்டறிந்துள்ளார்கள். சோவியத்து விஞ்ஞான தொழில்நுட்ப ஐந்தொகை (Almanac) என்ற வெளியீட்டில் முன்னோடிச் சோதனை பற்றிய இச் செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது.

உருக்கினுல் ஆக்கப்பட்ட பாதையில் உருக்குக் குண்டொன்று வழுக்கிச் செல்லக் கூடிய அமைப்பு இதற்குப் பயன்படுத்தப்பட்டது. இவ்வுருக்குப் பாதை மொலிப்தினம் என்ற உலோகத்துடன் கந்தகம் சேர்த்து ஆக்கப்பட்ட சேர்வையினுல் முலாமிடப்பட்டது. முலாமிடப்பட்ட உருக்குப் பாதை இலத்திரன்களால் தாக்கப்படுகிறது. இச் செயற்பாடு வெற்றிடத்தில் நிகழும் போது குண்டுக்கும் பாதைக்குமிடையில் உராய்வு இல்லாத நிலை ஏற்படுகிறது.

உராய்வோடு தொடர்பாக இரண்டு விசைகள் உள்ளன. ஒன்று மேற்பரப்பில் தாக்கும் செவ்வன் விசை (R). மற்றையது எல்லை உராய்வு விசை (F) இவ்விரண்டு விசைகளுக்குமிடையேயுள்ள தொடர்பு ஸ்திதம் (F/R) உராய்வுக் குணகம் எனப்படும். குண்டுக்கும் பாதைக்குமிடையே இயல்பாக உள்ள உராய்வுக் குணகம் 0.09 ஆகும். இலத்திரன்களால் தாக்கப்பட்ட பரப்பின் உராய்வுக் குணகம் 0.0015 ஆகும். உராய்வை நீக்குவதில் உருசிய விஞ்ஞானிகள் பெருவெற்றி பெற்றுள்ளனர் என்பதற்கு இவ்வெண்ணே சான்ருகும்.

இலத்திரனுல் தாக்கப்படுமுன் மொலிப்தினச் சேர்வைப் பாதை எழுந்த மானத்திற் கற்கள் பதிக்கப்பட்ட வீதியுடன் ஒப்பிடத்தக்கதான அமைப்புடையதாகும். இலத்திரன் மழை பொழிந்ததும் ஓர் அதிசயம் நிகழ்கிறது. இலத்திரன் தாக்கம் நிகழும் போது மொலிப்தினைற்றுப் பளிங்குகளாகிய கற்கள் குறைவிலா நிறை செப்ப அமைப்பில் தம்மை ஒழுங்காக்கிக் கொள்கின்றன. இதன் மூலம் மிகச் சிறந்த சாணைப் பொறியினுற் கூட ஆக்கமுடியாத நிறை அழுத்தத் தட்டைப் பரப்பு ஏற்பட்டு விடுகிறது.

மொலிப் தினைற்றுப் பளிங்குகள் ஏன் அவ்வாறு தம்மை ஒழுங்கமைத்துக் கொள்கின்றன என்பதை விளக்குவது நவீன பௌதிகத்தின் உயர் ஆய்வுத் துறைக்குரிய விடயமாகும். வழுக்கும் பரப்புத் தொகுதி உட்பட அனைத்துத் தொகுதிகளும் இயல்பாகவே தம்மை ஒழுங்காக்கிக் கொள்ளும் உள்ளார்ந்த தன்மை கொண்டுள்ளன. ஆனல், அவ்வாறு ஒழுங்கமைத்துக் கொள்வதற்கான போதிய ஆற்றல் அவற்றிடம் இருப்பதில்லை. தேவைப்படும் இவ்வாற்றல் வெளியேயிருந்து கிடைத்தும் சூழ்நிலை மாறுகிறது.

மேலே கூறப்பட்ட தொகுதியில் பளிங்குகளை ஒழுங்கமைப்பதற்கு இரண்டு கிலோ இலத்திரன் வோ(ல்)ற்று (2keV) சத்தி தேவைப்படுகிறது. இச்சத்தி இலத்திரன் அருவியால் வழங்கப்படுகிறது.

இப்பரிசோதனையின் விளைவுகள் விஞ்ஞானிகளிடையே பெரும் ஆர்வத்தைத் தூண்டியுள்ளன. அவர்கள் உராய்வால் ஏற்படும் வழக்கீட்டுத் தேய்வைத் தடுப்பதால் விளையும் எல்லையற்ற வாய்ப்புக்கள் பற்றி ஆராய்ந்து வருகிருர்கள்.

உராய்வினுல் பொறித் தொகுதிகள் தேய்ந்து, அடிக்கடி

(12ஆம் பக்கம் பார்க்க)

# மாறிவரும் போராட்டப் புறச் சூழல்

இன்று உலகெங்கும் பல்வகைப் பட்ட புரட்சிகளும் குழப்பங்களும் நாளுக்கு நாள் கிளர்ந்தெழுந்த வண்ணம் இருப்பது கண்கூடு. இப்புரட்சிகளும் கிளர்ச்சிகளும் தேசிய இனப் போராட்டம் சம்பந்தப்பட்டவையாகவும், அடக்குமுறைக்கு எதிரான கிளர்வுகளாகவும் இடதுசாரி அரசியல் நோக்குப் புரட்சிகளாகவும் பற்பல விதத்தில், பற்பல தளங்களில் இடம் பெறுபவையாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனுல் இப்புரட்சிகளின் உந்து சக்தியாகவும் முன்னணிப்படையாகவும் ஒவ்வோர் நிலைகளிலும் தளங்களிலும் இயங்குவர்கள் மாணவர்களாகவே இருக்கின்றனர். இதுவே இன்றைய பலதரப்பட்ட போராட்டங்களினதும் புரட்சிகளினதும் பொதுச்சூழலாகவும் பொதுக்கருப் பொருளாகவும் அமைந்துள்ளது.

இதன் முக்கியத்துவம் என்ன? இது எதை நமக்குச் சுட்டுகிறது?

புரட்சி பற்றியும் புரட்சிகர இயக்கங்கள் பற்றியும் அதிகம் எழுதிச் சென்ற மார்க்சின் நோக்கிலிருந்து இவற்றை நாம் எப்படி விளங்கிக் கொள்வது?

## ரஷ்யப் புரட்சி - புறச் சூழல்

மார்க்ஸ் புரட்சிக்கு அவசியமான சூழல் பற்றியும் அதை முன்னெடுத்துச் செல்வோர் பற்றியும் தெளிவாகவே சொல்லியுள்ளார்: அவர் கூற்றுப்படி, புரட்சிக்கு புறச்சூழ்நிலைகள் மிக அத்தியாவசியமானவை. சுருக்கமாகச் சொல்வதானுல் எந்த நாட்டில் தொழில் புரட்சி முதிர்ச்சி அடைகிறதோ அந்த நாட்டில், தொழிலாள வர்க்கம் தம்மை நசுக்கும் முதலாளி வர்க்கத்தையும் அவரைக் காப்பாற்றும் அரச யந்திரத்தையும் தூக்கியெறியும் வேட்கையோடு ஓரணியில் திரள்கிறது. இந்தத் திரட்சியானது சோஷலிஸப்புரட்சிக்கு வித்தாகிறது. இதையே மார்க்ஸ், தவிர்க்க முடியாத சரித்திரத்தின் தர்க்க வளர்ச்சியென்றும் சோஷலிஸப் புரட்சிக்குத் தேவையான புறச்சூழல் என்றும் சொல்கிறுர். ஆனுல் இன்று உலகெங்கும் நடைபெறும் போராட்டங்களும் புரட்சிகளும்— அதிசயமானவை இடதுசாரி நோக்குடையவையாக தம் இடது சாரி நாடுகளுக்குள்ளிருந்தே கிளம்புபவையாகவும் உள்ளன. அவற்றுக்குப் பல்வேறு தரங்களில் தலைமை தாங்கும் மாணவர் கூட்டமும் புரட்சி பற்றிய மார்க்சின் கூற்றை எவ்வளவு தூரம் நியாயப் படுத்துகின்றன?

சோஷலிஸப் புரட்சியை ரஷ்யாவில் வெடித்தெழவைத்த லெனினே, மார்க்சின் 'பொதுச் சூழல்' வரையறைக்குள் அதை நிகழ்த்தவில்லை. மார்க்சின் தொழில் புரட்சி வரையறைப்படி புரட்சி ஏற்பட்டிருக்க வேண்டுமானுல், அவற்றில் முகிர்ந்திருந்த இங்கிலாந்திலோ, ஜேர்மனியிலோ பிரான்சிலோ தான் புரட்சி ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனுல் புரட்சிக்கு உதவாதென மார்க்சாலே ஒதுக்கிவிடப்பட்ட, விவசாயிகளை அதிகமாகக் கொண்ட பின்தங்கிய நாடான ரஷ்யாவில் புரட்சியைக் கொண்டுவந்தார். லெனின்.

## சீனப் புரட்சி— புறச்சூழல்

அதன் தொடர்விளைவாக இன்னும் பின்தங்கியதும் பெரிய விவசாய நாடுமான சீனுவில் அடுத்த சோஷலிஸப் புரட்சி வெடிக்கிறது. சோஷலிசப் புரட்சிகள் அடுத்தடுத்து முன்னேற மார்க்ஸ் குறிப்பிட்ட புரட்சிக்குரிய புறச்சூழல் வரையறைதான் பின்னடைவு காண்கிறது. புரட்சியாளர்களால்அது கைவிடவும் படுகிறது.

சீனுவின் சோஷலிசப் புரட்சியின் வெற்றியோடு, புரட்சிக்கு மிக அவசியமென இன்னெருஅம்சத்தையும் அது முக்கியத்துவம் பெறச் செய்கிறது: அதுதான் மறைந்திருந்து தாக்கும் கெரில்லா போராளிகள். இராணுவ அமைப்போடு மறைந்திருந்து காட்டுப்புறங்களில் தாக்கும் கெரில்லா வீரர்களையும் மாவோ அறிமுகம் செய்கிறுர். கிராம மக்களோடும் விவசாயிகளோடும் ஒன்றறக் கலந்து வாழும் கெரில்லாக்கள்.

இது எதைச் சுட்டுகிறது?

மார்க்ஸ் கூறிய புரட்சிக்குரிய புறச்சூழல் என்பது கைவிடப்பட்டு, ஒவ்வொரு நாடும் தனக்குரிய புறச்சூழலையும் போராட்ட அணியையும் புரட்சிக்கு பயன் படுத்தும் புறச்சூழலாகக் கொள்ளத் தொடங்கியதையே.

## லத்தின் அமெரிக்கப் புரட்சிகள்— புறச்சூழல்

அடுத்த பாய்ச்சல் கியூபா, லத்தின் அமெரிக்க நாடுகளில் ஏற்படுகிறது. இங்கே காஸ்டரோ, சேகுவேரா போன்றவர்கள் நடத்திய இயக்கங்களும் இவைபற்றிய கொள்கை விளக்குநர்களான றெஜிஸ் டாப்றே, ஹேர்பட் மார்க்கியூஸ் போன்றவர்களின் புது இடதுசாரி (New Left) எழுத்துகளும் மார்க்சின் புறச் சூழல் சித்தாந்தத்தையே தலைகீழாக்குகின்றன.

மாவோ பொதுவுடைமைப் புரட்சிக்கு கெரில்லா வீரர்களைப் பயன்படுத்தியது, கியூபா, லத்தின் அமெரிக்க நாடுகளில் முழுநேர கெரில்லா வீரனே— அமைப்புக்கு எதிராக அதிருப்தி அடைந்த கெரில்லா வீரனே—பொதுவுடைமைப் புரட்சிக்கு அத்தியாவசியமானவன் என்ற நிலையை உருவாக்கியுள்ளது. குவேரா, காஸ்ட்ரோ இவர்களின் நோக்கில், புரட்சிக்கேற்ற இன்றைய உண்மையான தொழிலாளி (Proletarian) ஒரு கெரில்லா வீரனே, அதற்கெதிரான முதலாளி (Petty bourgeois) ஒரு தொழிற்சாலையில் வேலைபார்க்கும் தொழிலாளியே காரணம், காட்டிலே வாழும் கெரில்லா, எல்லா விதமான கஷ்டங்களுக்கும் முகங்கொடுத்து, போராட்டத்தையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் ஒரு 'துறவி' போன்றவன். நகரத்தில் வாழும் தொழிலாளியோ, நகரத்தின் வசதிகளாலும் சம்பள ஏற்ற இறக்கங்களாலும் பாதிக்கப்படும் ஒரு சொகுசுப் பேர்வழி. இவன் எந்நேரமும் புரட்சிக்கு எதிராக மாறலாம். இப்படிப் போகிறது அவர்களது வாதம் மார்க்சியமே இதனுல் தலைகீழாக்கப் படுகிறது. அத்தோடு ஒரு ஆயுதம் ஏந்திய கெரில்லா வீரனே நாளடைவில் ஒரு புரட்சிக் கட்சியையும் தலைவரையும் உருவாக்குகிறுன் என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனுல் உண்மை மார்க்சியப்படி பின்னதே முன்னதை உருவாக்க வேண்டும்.

தொழிலாளரைப் பற்றிய இவர்களது புதிய கணிப்பீடு பெருமளவுக்குச் சரியென்றே பலரை நம்ப வைத்துள்ளது. காரணம் 1968 இல் மாணவர்களால் தலைமை தாங்கப்பட்டு வெடித்த பரீஸ் புரட்சியின் தோல்விக்கு மேற்கூறப்பட்ட தொழிலாளரின் போக்கே காரணம் என்று நிரூபிக்கப்பட்டது.

## மாணவர் புரட்சிகள் —புறச்சூழல்

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஆயுதமேந்திய கெரில்லா வீரர் ஆற்றும் பணியை, பெரிய நகரங்களில் பல்கலைக்கழகங்களில், கல்லூரிகளில் உள்ள மாணவர்கள் இப்போ ஆற்றத் தொடங்கியுள்ளனர் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் கொள்கை விளக்குநராக இன்று மேற்கில் ஹேர்பட் மார்க்கியூஸ் திகழ்கிறுர். இவரின் கருத்துப்படி, இனி வரும்புரட்சிக்குரிய போராட்ட வீரர்கள் மாணவர்களே. இவர்கள் தமது பல்கலைக்கழக, கல்லூரி வாழ்க்கையில் எல்லாவித அனுபவங்களையும் கண்டவர்கள், கடந்தவர்கள் என்பதால் அற்ப சுக, துக்கங்களுக்காக தொழிலாளரைப் போன்று, புரட்சியைக் கைவிட் இணங்காதவர்கள்.

இவரின் இந்தக்கூற்றின் உண்மை, உலகெங்கும் இன்று மிகத்தெளிவாகவே வெளிக்காட்டப்பட்டுக் கொண்டுவருகிறது. இன்றைய நவீன வரலாற்றில், மாணவர்கள் ஆற்றிய பங்கே கூடுதலாக மேலோங்கி வந்துள்ளது. இந்தரீதியில் மார்க்ஸ் கூறிய புறச்சூழல் தலைகீழாக மாற்றப்பட்டுள்ளதோடல்லாமல், மார்க்சே கனவு கண்டிருக்கவும் முடியாத புதுவித "அக— புறச்சூழல்களில்" புரட்சிகள் புதுப்பரிமாணங்கள் எடுக்கத் தொடங்கியுள்ளன.

## புது அகப்புறச் சூழல்

இந்தப் புதிய அகப்புறச்சூழலாக ஒவ்வொரு நாட்டினதும் சமய கலாசார முற்போக்குப் பண்புகள் இன்று புரட்சியில் பங்களிப்புச் செய்யத் தொடங்கியுள்ளன. மார்க்ஸ் எதை 'அபினி' என ஒதுக்கினுரோ அவற்றின் உண்மைகளே புரட்சிக்குரிய சுலோகங்களாக லத்தீன் அமெரிக்க நாடுகளின் புரட்சிகளில் ஜபிக்கப்படுகின்றன. இதனடிப்படையில் புரட்சியில் பங்கெடுக்கும் மதகுருமாரின் பங்கு மகத்தான மந்திர சக்தியாக விளங்குகின்றது. இன்று எங்கும் எல்லா மட்டங்களிலும், மாணவராலும் ஏனையோராலும் ஆற்றுப்படுத்தப்படும் புரட்சி, ஆயுதத்தை நம்பியிருக்கவில்லை, மாருக புரட்சியில் பங்கெடுக்கும் மக்களின் மனோவலிமையையும் சகிப்புத் தன்மைமையும் சாவதற்குத் தயாரான தியாகத்தையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளன. □

□□ மு. பொ. □□

# சீன மாணவர் ஆர்ப்பாட்டம் வலுவிழந்தது ஏன்?

கடந்த வாரங்களில் மிகத்தீவிரமடைந்திருந்த சீனமாணவர்களின் ஆர்ப்பாட்டம் இப்போது உத்வேகம் குறைந்து வடிந்தோடிக் கொண்டிருக்கிறது என்றே கூறவேண்டும்,

ஜனநாயகரீதியான உரிமைகளுக்காக— அரசியலில் தாராண்மைப்போக்கு, பத்திரிகைச் சுதந்திரம்—போன்றவற்றுக்காகக் குரல் கொடுத்துத் தொடங்கிய இவர்களது ஆர்ப்பாட்டம், ரஷ்சியத்தலைவர் கோர்பச்சேவின் சீன வருகையோடு உச்ச மடைந்தது. காரணம் கோர்பச்சேவ் தனது நாட்டில் இத்தகைய முற்போக்கான கருத்துகளுக்கு இடமளிப்பவராக நிற்பதே. "அதனுல் கோர்பச்சேவே எங்கள் தலைவர்" என்று கூறும் அளவுக்கு மாணவர்களின் மனதைக் கவர்ந்தவராய் கோர்பச்சேவ் மாறினுர். தனது அமைதியான முற்போக்குக் கருத்துப் பாய்ச்சல்களால் பிற நாடுகளின் சீர் திருத்தங்களுக்கும் புரட்சி மாற்றங்களுக்கும் காலாய் இவர் இருக்கிறுர்.

ஆனுல் சீனுவில் வெடித்த மாணவர்களின் கிளர்ச்சி, பெரும் போராட்டமாக வெடுத்து சீன அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தாமல் வடிந்தோடிப் போனதற்குரிய காரணம் என்ன?

கோர்பச்சேவ் தனது அமைதியான பாணியில் கருத்து மாற்றங்களை முன்வைத்து புரட்சியை பல இடங்களில் தூண்டுகிறுர் என்ருல், அத்தகையபுரட்சிகள் இரத்தப்புரட்சியாக மாருமல் அமைதியை அடையும் வண்ணம் சீனத்தலைவர்கள் கடைப்பிடித்த அமைதி ஆச்சரியமானதே. ஆயுத அடக்குமுறைக்கே பயிற்றப்பட்ட சீனத்தலைமை. அவ்வாறு நடந்துகொண்டதன் மூலம் மேலோங்கிய மாணவர் ஆர்ப்பாட்டத்தை புரட்சியாக வெடிக்காமல் செய்துள்ளது. இது ஒரு ஆச்சரியமான போக்கே.

அத்தோடு மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நீடிக்க முடியாமல் போனது ஏன்?

மாணவர்கள் ஓர் அமைப்பால் இயக்கப்படாதவர்கள், ஓர் அமைப்பின் இயக்கமே மக்களை வழிநடத்தக்கூடிய திட்டங்களை வகுக்கக்கூடியதாய் இருக்கும். ஆகவே வெறும் மாணவர் ஆர்ப்பாட்டம் மக்களை சதா தம்மோடு வைத்திருக்கும் வாய்ப்பில்லை. இதுவே இதன் தோல்விக்கு இன்னுேர் காரணமாகும். எழுகின்ற மக்கள் எழுச்சியை வழிப்படுத்தும் ஓர் அமைப்பும் தலைமையும் தேவை. 1968 இல் பரீஸ் புரட்சி தோற்றதுவும் இதனுலேயே.

# அமில மழை

சாதாரண வளியில் 0.03 வீதம் காபனீரொட்சைட்டு காணப்படுகின்றது. இதனுடன் மழைத்துளி சேருவதால் காபோனிக்கமிலம் உண்டாகி மழைநீர் சிறிதளவு அமிலத் தன்மை பெறும்.

இடி மின்னல் ஏற்படும் போது வளியிலுள்ள நைதரசன் வாயுவுடன் மழைநீர் சேர்ந்து சிறிதளவு நைத்திரிக் அமிலம் தோன்றுவதாலும் மழைநீர் அமிலத் தன்மையைப் பெறும். இந்த இயற்கையான அமிலத்தன்மையால் பூமிக்கு நன்மையே கிடைக்கின்றது.

ஆனுல் தற்பொழுது தொழிற்சாலைகளும், வாகனப் போக்குவரத்தும் அதிகரித்துள்ளமையினுல் சூழலில் அதிகளவு காபனீரொட்சைட்டுடன் கந்தகஈரொட்சைட்டு, நைதரசனீரொட்சைட்டு போன்ற வாயுக்களும் அதிகளவு வெளியிடப்படுகின்றது. இவற்றுடன் மழைநீர் சேரும் போது கூடிய அமிலத்தன்மை கொண்டதாகின்றது.

அமில மழையினுல் மீன்களும், ஏனைய நீர் வாழ் உயிரினங்களும் இறந்து போகின்றன. இவற்றை நம்பி வாழும் பறவைகளுக்கும் மீன்பிடித் தொழிலாளருக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

மண்ணும் அதிகளவு அமிலத் தன்மையடைகின்றது. தாவரங்கள் சிறப்பாக வளர முடியாமல் போகின்றது. மனிதனுக்குத் தேவையான அத்தியாவசிய தானியங்களின் விளைச்சல் குறைந்து விடும்.

காடுகளும் விரைவில் பாதிப்புறுவதற்குரிய அபாயம் பற்றியும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

— பா. ரகுவரன் □

# தொடர்பு சாதனம்:

## எண்ணக்கரு — சமூக அபிவிருத்தி —

## அதில் தொடர்பு முறையின் பங்கு

கலைச்சாரல்

யாவருமே நன்கறிந்த சம்பிரதாய தொடர்பு சாதனங்கள் (பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, நூல்கள், சிற்றேடுகள் போன்றவை) மாத்திரமன்றி நவீன மின்னியக்க சாதனங்களும், செய்மதித் தொடர்பு சாதனங்களுங்கூட பொது சனத் தொடர்புடையவையாக இன்று மாறிவருவதை நாம் அவதானிக்கிறோம். இவற்றையும் பயன் படுத்தி வெகுசனத்துடன் தொடர்புகொள்ள 'வேண்டிய தேவை எமக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ளது.

□ □

### தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி:

ஒரே மூச்சிலே தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியை நாம் குறிப்பிடவேண்டுமாயின் இவ்வாறு கூறலாம்:

தொடக்கத்திலே பறை அல்லது மேளத்தின் ஒலியூடாகப் பொது மக்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

10 ஆம் நூற்றுண்டளவிலே Signal Fire எனப்படும் தீயை மூட்டி சமிக்ஞை ரீதியிலான தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.

பின்பு புகையைப் பரப்பித் தொடர்பு கொள்ள முயற்சி எடுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து குதிரை வீரர் மூலம் தொடர்பு கொள்ளப்பட்டது.

---

**The global village — உலகமே, உலகளாவிய ஒரு கிராமமாக வந்து கொண்டிருக்கிறது என்பது மார்ஷல் மக்லூஹனின் சித்தாந்தம். செய்மதித் தொலைக்காட்சிகளும், விண்வெளி ஆய்வுகளும், ஐரோப்பிய பொருளாதார சமூகம், தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கம் போன்றவையும் இந்த உலகம் ஒரு கிராமம் என்பதை உறுதிப் படுத்துவதுபோல அமைவதை நாம் காண்கிறோம்.**

---

*1837 ஆம் ஆண்டிலே சாமுவேல் எம். பி. மோர்ஸ் என்பவர் தந்தித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.*

*1876 இல் தொலைபேசி அறிமுகமாகியது.*

*கம்பியில்லாத் தந்திச்சேவையை 1895 இலே குக்லியெல்மோ மார்க்கோனி ஆரம்பித்ததன் மூலம் நவீனகால வானொலித் தொடர்புக்கு வழி வகுத்தார்.*

*1928 இலே, மூன்றங்குலச் சதுரத் திரையிலே தொலைக் காட்சிப் படங்களைப் பார்க்கக் கூடியதாய் இருந்தது.*

*தொடர்புச் செய்மதிகள் 1962 இல் செயற்படத் தொடங்கின.*

பார்வை, அங்க அசைவு, சொற்கள், ஒலிகள், படங்கள் மூலமும் காட்சி, கேட்டல், ஸ்பரிஸம் ஆகிய புலன்கள் மூலமும் தகவல், சிந்தனை, உணர்வு அபிப்பிராயம் போன்றவை பரிமாறப் பட்டு வருவதையும் நாம் அறிவோம்.

□ □

### தகவற் புரட்சி யுகம்:

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பல தகவல்கள் பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. இந்த தசாப்தத்தைத் தகவற் புரட்சி யுகம் என்று பலரும் அழைக்கின்றனர். இந்தத் தகவற் புரட்சியினுல் பூகோள எல்லைகள் அகற்றப் படுகின்றன. பயன் மதிப்புகள் அல்லது விழுமியங்கள் மாற்றத்திற்குள்ளாகின்றன. நிறுவனங்கள் புனரமைக்கப்படுகின்றன. கொள்கைகள் மறுபரிசீலனை செய்யப்படுகின்றன. புதிதாக வகுக்கப்படுகின்றன. நாம் வாழும் இந்தப் பூமிக் கோளமே புதிய திசையில் செல்ல வழி வகுப்பது போல இந்தத் தகவற் புரட்சி செயற்படுகிறது எனலாம்.

மேற்கு நாடுகளிலே கைத்தொழில் யுகம் முடிவடைந்து தகவற் புரட்சி காரணமாக அந்த அபிவிருத்தியடைந்த நாடுகளில் பொருளாதாரப் போக்கே மாற்றமுற்றிருப்பதாகப் பகுப்பாய்வாளர் கூறுகின்றனர்.

இருந்தபோதிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலே சமுதாய அபிவிருத்திக்கு எவ்வாறு வெகுசனத் தொடர்பு சாதனங்களை நாம் பயன் படுத்தலாம் என்ற எண்ணக் கரு இன்னமும் தெளிவாக உருவாகவில்லை என்றே சொல்லவேண்டும்.

□ □

### தகவற் புரட்சி யுகத்தின் பரிமாணங்கள்:

இந்தப் புதிய யுகத்தின் பரிமாணங்கள் எவை?

இதற்கான பதிலை விஞ்ஞான ரீதியாகவே விளக்குவர். அந்த விளக்கத்தை நிபுணர்களே அளிக்க முடியும். முன்னர் ஒரு போதும் இல்லாதவாறு துரித வேகத்திலே எமது பௌதீகச் சுற்றுடல் மாற்றமடைந்து வருவதை நாம் அறிவோம். . உதாரணமாக நகர்மயமாதல் இந்த மாற்றங்களில் ஒன்று எனலாம். போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி காரணமாக ஓரிடத்தில் இருந்து இன்னெரு இடத்திற்குச் செல்லல் மிக எளிதாயிற்று.

தகவல்களைச் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், வகுத்துத் தொகுத்தல், பரிவர்த்தனை ஆகியவற்றிலே தொழில் நுட்ப ரீதியான மாற்றத்தை நாம் காண்கிறேம். இங்கு கணனி முக்கியத்துவம் பெறுவதை நாம் அறிந்து கொள்கிறேம். 'ரொபோட்' என்ற செயற்கை மனிதன், உலகளாவிய தொலைக்காட்சிகளை பார்க்கக் கூடிய வசதிகளை அளிக்கும் செய்மதி போன்றவை, வெகுசனத் தொடர்பு சாதனங்களாக மாறும் தன்மையையும் நாம் அவதானிக்கிறேம். நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் அறிமுகமாகிய ட்ரான்ஸிஸ்டர் இப்பொழுது கவனத்தை ஈர்க்காத விதத்தில் எவ்வாறு சாதாரணமாகிப்போய் விட்டதோ, அதே போல இந்தப் புதிய சாதனங்களும் இன்னும் இருபது ஆண்டுகளில் சாதாரணமாய்ப் போய்விடும்.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள் ஏதோ ஒரு செய்தியைத் தெரிவிக்கின்றன என்பர். 'த மீடியா எஸ் மெசஜ்'' (The Media as Message) என்பது இக்கோட்பாடு. இத்

**கே. எஸ். சிவகுமாரன்**

தச் சந்தர்ப்பத்திலே 'மீடியம் இஸ் த மெசஜ்' (Medium is the Message) என்ற கூற்றையும் நினைவுபடுத்தலாம். அதாவது செய்தியே ஊடகமாகிறது. ஊடகமே செய்தி என்பது இதன் அர்த்தம். மார்ஷல் மக்லூஹன் என்ற கனேடியப்' பேராசிரியர், இதைச் சுமார் கால் நூற்றுண்டுக்கு முன்னர் பிரகடனஞ் செய்திருந்தார். The Global Village— உலகமே, உலகளாவிய ஒரு கிராமமாக வந்து கொண்டிருக்கிறது என்பது மார்ஷல் மக்லூஹனின் சித்தாந்தம். செய்மதித் தொலைக்காட்சிகளும், விண்வெளி ஆய்வுகளும், ஐரோப்பிய பொருளாதார சமூகம், தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கம் போன்றவையும் இந்த உலகம் ஒரு கிராமம் என்பதை உறுதிப்படுத்துவதுபோல அமைவதை நாம் காண்கிறேம்..

□ □

### செய்தியாக தொடர்பு சாதனங்கள்:

'மீடியா எஸ் மெசஜ்' (செய்தியாக வெகுசனத் தொடர்பு சாதனங்கள்) என்ற எண்ணக் கரு பற்றிய ஒரு விளக்கத்தை இப்பொழுது பார்ப்போம்:

பத்திரிகைத்துறையை எடுத்துக் கொண்டால்— பலதரப்பட்ட செய்திக்குவியல்கள் கிடைக்கும் பொழுது, ஒரு பத்திரிகையாளன் என்ன செய்கிறன் என்றல், அந்தக் குவியல்கள் மத்தியிலே சிலவற்றை மாத்திரம் தேர்ந்தெடுக்கிறன். ஒரு நல்ல பத்திரிகையாளன், எது எது முக்கியமானவை என்பதை அனுபவம் காரணமாகவும், புத்தறிவு காரணமாகவும் ஷணநேரத்தில் தேர்ந்தெடுக்கக் கூடிய தகைமையைப் பெற்று விடுகிறன்.

குறிப்பிட்ட ஒரு சம்பவம் பற்றி ஒரு பத்திரிகையாளர் எழுத வேண்டியிருந்தால் அந்தச் சம்பவத்தின் சில அம்சங்களை, செய்தி அடிப்படையில் தேர்ந்தெடுத்து அந்த அம்சங்கள் என்ன பயன்மதிப்பைப் பெறுகின்றன என்பதை ஊகிக்கும் திறமை படைத்தவராய் இருத்தல் வேண்டும். சம்பவம் செய்தியாகிறது (Event -as- News) என ஆய்வாளர் இதனைக் குறிப்பிடுவர்.

இன்னும் விளக்கமாகக் கூறினல்— சம்பவங்கள் மீது முக்கிய கவனஞ் செலுத்தும் அதே வேளையில், சில அம்சங்கள் ஏனையவற்றைவிட செய்தித்தன்மை வாய்ந்ததாக அமையக் கூடும். உதாரணமாக, வன்செயல் அச்சம்பவங்கள் மத்தியில் இடம் பெற்றல் அது பொருத்தமுடையதாகவும் இருக்கலாம். ஆயினும் அந்த வன்செயலை மாத்திரம் காட்டி அதில் கவனஞ் செலுத்தும் போது அந்த வன்செயல் நடைபெறுவதற்கான பின்னணிக் காரணிகளை நாம் மறந்துவிட நேர்கிறது.

தொலைக் காட்சி என்ற வெகுசனத் தொடர்புச் சாதனம் என்ற ஊடகம் ஏற்படுத்தும் 'சிற்றுவேஷன்' (நிலைமை) காரணமாகப் பத்திரிகைகளும் சிக்கனமாகவும், மிகத்தேர்ந்தெடுத்த முறையிலும் செய்திகளையும் விமர்சனங்களையும் வெளியிடவேண்டியுள்ளது.

பத்திரிகையோ, வானொலியோ, தொலைக்காட்சியோ எந்த விதமான வெகுசனத் தொடர்பு சாதனங்களிலும் பணி புரியும் செய்தியாளருக்கும் எலிபோல குள்ளப்புத்தியும், நம்பத்தகுந்த உள்ளடக்க வெளிப்பாட்டுத் திறனும், இலக்கிய ரீதியான அறிவாற்லும் இருப்பது அவசியமென்பர்.

('Ratlike cunning, a Plausible Manner and a literary ability')

□ □

### வெகுசனத் தொடர்பாளரின் கடமை:

வெகுசனத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தும் ஒருவருக்குத் தனது தொழில் சம்பந்தமாகவும், தனது நிறுவனம் தொடர்பாகவும், இறுதியில் தாம் வாழும் சமுதாயம் சம்பந்தமாகவும் முக்கிய கடமை ஒன்றுண்டு. அந்தக் கடமை என்ன வென்றல்— தனது சக்தியையும் அதிகாரத்தையும் பொறுப்புணர்ச்சியுடனும் கட்டுப்பாடுடனும் பிரயோகிப்பதுதான்.

உதாரணமாக ஒரு நிருபர் ஒரு செய்தியைச் சமர்ப்பித்தால், உதவி ஆசிரியரோ, பத்திரிகை ஆசிரியரோ, முகாமைத்துவ பீடத்தினரோ அச்செய்தி எப்படி வெளிவர வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்ற போதிலும், நிருபர் தன்னளவிலே, தாம் சமர்ப்பிக்கும் செய்தி உண்மை விபரங்களடங்கியதா என்று முன் கூட்டியே சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். பின்பு தன்னுடையன்றவரை, அதன் தன்மையை ஆழமாக மதிப்பீடு செய்தல் வேண்டும். பின்னணியை மனதில் வைத்து அந்தச் செய்தியை எழுத வேண்டும். இவை எல்லாம் முக்கியம்.

பேனு வாளினும் கூர்மையானது என்னும்பொழுது, நவீன தொடர்புச் சாதனங்கள் வளர்ச்சி பெருத கட்டத்திலே, எழுத்துக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்துக் கூறப்பட்ட கூற்றுக இருந்தாலும், இந்தக் கூற்று ஏனைய வெகுசனத் தொடர்பு ஊடகங்களுக்கும் பொருத்தமானது தான்.

□ □

வெகுசனத் தொடர்பு சாதனங்களில் பணிபுரியும் நிருபர்கள், ஆசிரியர்கள், தயாரிப்பாளர்கள், நிறைவேற்று அதிகாரிகள் போன்றவர்கள் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் சமுதாயத்தை எவ்வாறு பாதிக்கின்றன. எவ்வாறு சமூக மாற்றத்துக்கு அல்லது அபிவிருத்திக்கு உதவுகின்றன என்பதை நன்கு தெரிந்திருத்தல் வேண்டும் என்பர். அதே சமயம் அவற்றைப் புறக்கணிக்கவும் முடியாது.

இத்தத்துறைகளில் பணிபுரிய முன்வருபவர்கள், தத்தமது ஊடகங்கள் பற்றியும், அவை எந்தச் சட்ட வரம்புக்குள் செயற்படுகின்றன என்பதையும் நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

குறிப்பிட்ட சாதனங்களின் வரையறைகள் எவ்வாறு ஏற்பட்டன என்பது பற்றியும் தெரிந்து வைப்பதுடன், அண்மைக்கால தொழில் நுட்பவியல் வளர்ச்சி, சமூகமாற்றம் ஆகியவற்றின் பின்னணியிலே தமது அணுகல் முறை எப்போது, எப்படி மாற்றப்பட வேண்டும் என்று அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.

---

**எந்தவிதமான வெகுசன தொடர்பு சாதனங்களிலும் பணிபுரியும் செய்தியாளருக்கு எலிபோல குள்ளப்புத்தியும், நம்பத்தகுந்த உள்ளடக்க வெளிப்பாட்டுத்திறனும், இலக்கியரீதியான அறிவாற்றலும் இருப்பது அவசியமென்பர்.**

---

இந்த உலகிலே மாற்றமே இயற்கையின் நியதி என்பர். எனவே வெகுசனத் தொடர்பு சாதன எண்ணக்கரு சமுதாய அபிவிருத்திக்கு அல்லது மாற்றத்துக்கு உதவ வேண்டும்.

□ □

செய்தியாளர்கள் வெறுமனே செய்திகளைத் தருவதோடல்லாமல், ஒரு விமர்சகன் போன்று பகுத்தாய்ந்து விவரணை செய்பவராக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு செய்வதற்கு இவர்களுக்குப் பின்னணி அறிவு குறிப்பிட்ட ஒரு துறையில் மாத்திரம் இருந்தால்

(11ஆம் பக்கம் பார்க்க)

## பகுத்தறிவுத் தெருக்கள்

இரண்டொருநாள் நாங்கள் பிரிந்திருந்தோம்.
ஒரு நெடுந்தூரப் பயணம் நீ சென்றுள்ளாய் என்று
எனக்குத் தெரியும்.

நாங்கள் சந்திக்காத தினங்களில்தான்
எமது சமுகங்களுக்கிடையில்
திரும்பவும் தலையிடியும் காய்ச்சலும் வந்தன நண்ப!

நமது நகரம்
மீண்டும்
தாலி அறுத்துக் கிடந்தது.

எப்போதுமே காற்றுக்குப் பொய்சொல்ல
ஆசைதான்.

அது பெருவிரலால் நடந்து
கண்டபடி தூவியது கதைகளை.

நகரத்தில்
சுவரொட்டிகளும், அவைகளைத் தாங்கிய பழைய
மதில்களும்

அமைதியாய் இருக்க
மற்றெல்லாம் அதற்குச் செவிகொடுத்து ஆடியதால்
தலைமயிரைக்கூட எழுப்பிவிட்டது
உணர்ச்சி!

இன்று
மூன்று தினங்களின் பிறகு
உன்னைச் சந்தித்தேன்.

நெடும்தூரப் பயணத்தின் களைப்பை
உன் முகத்தில் கண்டேன்.

இருந்தாலும் நகரம் இயங்கவில்லை.
அதன் நரம்புகளுக்கிடையில் தடைப்பட்ட இரத்தம்
இன்றும் சரியாகப் பாயவில்லை.

நாம்மட்டும் சினேகித்தோம்.
அந்தப் பொது இடத்தில் நின்றபடி
உன் கடைச் சிப்பந்தியின் பொறுப்பில்லாத்
தனம்பற்றி
கருத்துகளை வெளியிட்டோம்.

பழையபடி
உன்னோடு நானும்
என்னோடு நீயுமென;
நாம் இருவரும் ஒன்ருக மனங்களுக்குள் காற்று
புகவிட்டுக் கதைக்கின்ற -
தினமும்
கைசூப்பும் அந்தப் பருவத்தை அடைகின்ற —
"இடத்திற்கு" நாம்போக மறியலுண்டு.

தெருக்களுக்குத் தெரியும்;
தூவானம் அடங்கும்வரை
அவைகள் தேடாது.

— சோலைக்கிளி □

## மனம்

கோடி பகல் சூர்யன்கள்
உடைந்து விழுந்த மாதிரி
உள் மனவானில் எரிவு.

புல் நுனியில் விழுந்த
பனித் துளி மனதில்
கடலின் விரிவு.

சிறுபிள்ளை கிறுக்கிய கீறல்கள்
ஆழ்மனத் தாளில்;
கீறல்கள் கார்ட்டூனக,
அதில் —
நான் — என்வாழ்வு.

ஆழ்மனதில்
ஆன்மீக தென்றல் தவழும் கணம்
விலகாத மையப் புள்ளியில்
சூர்யன் நிற்பதைப் போல்
இருப்பில் ஓர் தெளிவு.

— ஈழக்கவி □

# தூவானம்

**O கேரளக் கலைத்துறையில் அரசின் தலையீடு**
**O மக்கள் கலைஞனுக்கு வளரும் ஆதரவு**

கலைப் படைப்புகள் கலை அளவுகோல்களால் மதிப்பிடப்பட்டு, அப்படைப்புகளும் கலைஞர்களும் கௌரவப்படுத்தப்படுவது சரியானதாகும். ஆனல் இதற்கு மாருக சார்பான அரசியற் கொள்கை, மதம், தமது குழுவைச் சேர்ந்தவர் என்பன போன்ற அளவுகோல்களால் பொருத்தமில்லாத படைப்புகளும், கலைஞர்களும் முதன்மை - கௌரவம் பெறுவதும், ஏனையோர் புறக்கணிக்கப்படுவதும் பல இடங்களில் நடந்துதான் வருகின்றது. அண்மையில் வந்த **இந்தியா ருடே** (மே, 15) சஞ்சிகையில் கேரளக் கலைத்துறையில் நிகழும் இத்தகைய குறைபாடுகளைப் பற்றி, **ரமேஷ் மேனன்** என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

இரண்டு வருடங்களின் முன்னர் சி.பி.ஐ. (எம்) தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி (L,D.F.) கேரளாவில் ஆட்சிக்கு வந்ததிலிருந்து 'மார்க்சியவாதி' என அடையாளங் காட்டுபவர்கள் 'வெகுமதி'களைப் பெறுகிருர்கள். அரசாங்கம் கலாசாரத் துறையில் தனது செல்வாக்கைச் செலுத்துகிறது. ஒரு மாதத்திற்கு முன்னர் பிராந்திய விருதுகள் (State Awards) அறிவிக்கப்பட்டபோது . **பிறவி** என்ற மலையாளப் படத்துக்கு ஆறுதல் பரிசாக, இரண்டாவது இடமே கொடுக்கப்பட்டது; அதன் தயாரிப்பாளர் அப்பரிசை வாங்க மறுத்துவிட்டார். இரண்டு கிழமைகளின் முன்னர் தேசிய விருதுகள் (National Awards) அறிவிக்கப்பட்டபோது, 'பிறவி'க்கு நான்கு விருதுகள் அகில இந்திய ரீதியில் கிடைத்தன. சி.பி.ஐ. (எம்) தலைவரான ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாட், இடதுசாரிக்கருத்து முதன்மை பெற்றிருக்கும் 'ஒரே தூவல் பக்ஷிகள்' என்ற படத்தைச் சிறந்த படமென, பிராந்திய விருதுகள் அறிவிக்கப்படுவதற்குச் சில கிழமைகள் முன்பே அறிவித்திருந்தது, இங்கு குறிப்பிடத்தக்கது.

அநேக கலை, இலக்கிய விமர்சகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளார்கள். உலகப் பிரசித்தி பெற்ற **அடூர் கோபாலகிருஷ்ணன் (எலிப்பத்தாயம், சுயம்வரம், கொடியேற்றம்** போன்ற திரைப்படங்களின் இயக்குநர்.) 1987 இல் **முகமுகம்** என்ற படத்தினை எடுத்தார். பின்னுளில் சீரழிந்துபோகும் ஒரு இடதுசாரியைப் பற்றியது, அப்படம். அது வெளிவந்ததிலிருந்து மார்க்சியவாதிகள் பலருக்குத் தொந்தரவு தரும் ஒன்ருகக் கருதப்படுகிறது. அதனல், மலையாள சினிமாவின் பொன்விழாவினை அண்மையில் கொண்டாடிய 'கேரள திரைப்பட அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்' தனது நிகழ்ச்சிகளில், புகழ்பெற்ற இத்திரைப் படத்தைத் திரையிடவேயில்லை.

இவற்றைவிட சாஹித்ய அக்கடமி விருதும் அவதூறுக்குள்ளாகியுள்ளது. சிறந்த நாவலுக்குரிய பரிசு **ஒரே தேசகாரய நாங்கள்** நூலுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதை எழுதிய **காளி** இலக்கிய உலகில் நன்கு அறியப்படாதவர். மார்க்சியக் கட்சியின் பிரசாரப் பத்திரிகைகளில் மட்டுமே இவர் எழுதி வருபவர். அத்துடன் அந்த நாவல், சி.பி.ஐ. (எம்) வெளியீட்டுப் பிரிவான **சக்தியினல்** வெளியிடப்பட்டதாகும். புகழ் பெற்ற எழுத்தாளர் **ஓ. வி. விஜயனின்** 'தர்ம புராணம்' 'குருஸாகரம்' போன்றவற்றுக்குமேலாக அந்த மேலோட்டமான நாவலுக்குப் பரிசு கொடுக்கப்பட்டமை,மலையாள விமர்சகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. பரிசுக்குச் சிபார்சு செய்யப்பட்ட 10 நூல்களின் பட்டியலிலும் விஜயனின் நாவல்கள் இடம் பெறவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது.

சாஹித்ய அக்கடமி, செந்நெறிக் கலைகளுக்கான அக்கடமி போன்ற அமைப்புகளின் தலைமைப் பொறுப்புகளுக்கும் கட்சி சார்ந்தவர்களே

### நிலாம்பரன்

புதிதாக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். இன்னொரு சம்பவத்தையும் இடதுசாரி அரசாங்கத்தின் சகிப்பற்ற தன்மைக்கு உதாரணமாக, ரமேஷ் மேனன் சுட்டிக்காட்டுகிருர்.

அதாவது, திருவனந்தபுரத்திலுள்ள அரச ஊழியர்கள் **இழந்த சொர்க்கம்** என்ற வீதி நாடகத்தை நடத்தினர். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் சிதைந்து போன மக்களின் கனவுகளை இந் நாடகம் சித்திரிக்கின்றது. அதனல் அந் நாடகக் கலைஞர்களை அரசு கைது செய்திருக்கிறது!

O O

சி.பி.ஐ. (எம்) ஐச் சேர்ந்த **சவ்தார் ஹஸ்மி** என்ற வீதி நாடகக் கலைஞர், நாடகமொன்றை நிகழ்த்திக்கொண்டிருக்கையில் இந்திரா கொங்கிரஸ் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டாரலலவா? (பார்க்க 'திசை' 18-3-89)

அந்த மக்கள் கலைஞனின் படுகொலை இந்தியாவின் பல பகுதிகளிலும் கலைஞர்களின் எதிர்ப்பினைத் தூண்டிவிட்டிருக்கிறது. கலைஞர்கள் இணைந்த **சவ்தார் ஹஸ்மி சமரோஹ்** அமைப்பு, எதிர்ப்பு நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்தி வருகிறது.

ஹஸ்மி தாக்கப்பட்டு டெல்லி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது, அதற்கு வெளியே, ஹஸ்மியின் நண்பர்களும் சிறு கூட்டத்தினரும் நின்றனர். அப்போது, நாடக மேதை **இப்ராஹிம் அல்ஹாஸி** மேசையொன்றின்மேல் ஏறி நின்றபடி, தனது வாழ்நாளின் மிக மனவெழுச்சிவாய்ந்த பேச்சினை, நிகழ்த்திஞர். அந்த மரணத்தின் தாக்கம் அப்போது பலரால் சரியாக உணரப்படவில்லை.

மூன்று மாதங்களின் பின்னர் இப்படுகொலைபற்றி, 'சவ்தார் ஹஸ்மி சமரோஹ்' 25,000 வீதி நாடக நிகழ்ச்சிகளை இந்தியாவின் பல பகுதிகளிலும் நடத்தியிருக்கிறது. மாபெரும் ஓவிய விற்பனைக் காட்சி டெல்லியில் நடந்தது. ஹஸ்மியின் மரணத்தைச் சித்திரிக்கும் **M. F. ஹுசெயினின்** ஓவியமொன்று 10 இலட்சம் (இந்திய) ரூபாவுக்கு விற்பனையாகியிருக்கின்றது. 100இற்கு மேற்பட்ட கவிஞர்கள்—இவர்களில் சிலர் கிழவர்கள் —தமது சொந்தச் செலவில் டெல்லி சென்று கவிதை வாசித்தார்கள். பொம்மலாட்டக் கலைஞரான டாடி பதம்ஜீ, நவீன நடனக் கலைஞரான **அஸ்தாத் தேபூ** இருவரும் இணைந்து, ஹஸ்மியின் மரணத்தைச் சித்திரிக்கும் சில நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளனர். தொலைக் காட்சிக் கலைஞர் **சஷி குமார்** ஹஸ்மியின் வாழ்வைச் சித்திரிக்கும் உணர்ச்சிகரமான திரைப்படத்தைத் தயாரித்துள்ளார். **சோமநாத் ஹோர்** 'தோழர்கள்' என்ற சிற்பத்தை உருவாக்கியுள்ளார்.

ஹஸ்மி பலரைக் கவர்ந்திருப்பதற்கு அவரது ஆளுமையும் ஒரு காரணம். தனது அரசாங்க உத்தியோகத்தை உதறிவிட்டு வீதி நாடக இயக்கத்தில் அவர் தன்னை அர்ப்பணித்தார். எதிர்ப்புகளைச் சித்திரிக்கும் அரசியல் நாடகங்கள், பஸ்ஸிற்காகக் காத்து நிற்கும் மக்கள் முன்னிலையில் அவரது குழுவால் நிகழ்த்தப்பட்டபோது, மக்கள் கவர்ந்திழுக்கப்பட்டார்கள். ஹஸ்மி முன்னரும் இரு தடவைகளில் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிருர். □

## சினிமா சினிமா

சினிமாவில் தரமான திரைப்படங்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படுவது ஆஸ்கார் விருது. இது 1931 முதல் வழங்கப்பட்டு வருகின்றது; முதல் ஆஸ்கார் விருது 1927ஆம் ஆண்டு. ஆனல் அன்று ஆஸ்கார் என்ற பெயரில் அல்லாமல் 'அகாடமி' பரிசு எனவே வழங்கப்பட்டது. முதல் ஆஸ்கார் விருது பெற்ற படம் 'விங்ஸ்' என்ற ஊமைப்படமாகும். இதுவரை அதிகளவு ஆஸ்கார் விருதுகளைப் பெற்றவர் அமெரிக்காவின் காட்டூன் நிபுணரான 'வால்ட்டிஸ்னி' ஆவார். 135 ஆஸ்கார் விருதுகளை இவர் பெற்ருர்.

— தி. தவபாலன் □

# திசையின் குறுநாவல்

*எண்ணிக்கையில் குறைவான கதைகளை எழுதியுள்ள போதும் தனது எழுத்தாற்றலால், ஈழத்தின் முக்கிய புதிய தலைமுறை எழுத்தாளர்களில் ஒருவராக ஸ்ரீதரன் கருதப்படுகிறார். 'கணையாழி' 'அலை' போன்ற சஞ்சிகைகளில் இவரது சிறுகதைகள் வெளியாகி உள்ளன. இக்குறுநாவல் 1978 ஆம் ஆண்டில் அவரால் எழுதப்பட்டது.*

*பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியற் பட்டதாரியான ஸ்ரீதரன் தற்போது அமெரிக்காவில் வசிக்கிறார்.*

## சொர்க்கம்

### ஸ்ரீதரன்

எசக்கி என்கிற இசக்கிமுத்து, செவுத்தி என்றழைக்கப்படுகிற செவுத்தியான், கரீம் இவர்களடங்கிய புனிதத்திரித்துவம் நமது கவனம்.

எசக்கியும், செவுத்தியும், கொழும்பு மாநகரசபை சுத்திகரிப்பு வாகனமேறிய பெம்மான்கள்.

கரீம் ஒரு ஜாதி ஆள். இரவல் அல்லது வாடகைக்குத் தள்ளுவண்டி கிடைக்கிற நேரம் விறகு தள்ளுவான், அல்லது இளநீர் விற்பான். சில வேளைகளில் பழைய புத்தகங்களைப் பரவி விற்பான்.

இதை இப்போதே சொல்லலாம்.

இந்தப் புத்தக வியாபாரம் எசக்கி, செவுத்தி இவர்களோடும் சம்பந்தப்பட்டது. சில வேளைகளில் நடை பாதையில் பார்க்கர் பேனா விற்பான். மற்றும் சிலவேளைகளில் தண்ணீர்க் குழாய் பழுது பார்ப்பான். தொழிலைச் சொல்லிக் கரீமைச் சொல்ல முடியாது.

எசக்கி அறுபது வயதைத் தாண்டிய ஒரு கிறிஸ்தவன். எசக்கிக்கு ஒரு குடும்பம் அமைந்து போனதற்கு இதை ஒரு காரணமாகச் சொல்லலாம். எசக்கியின் மாளிகையில் போய்க் கணக்கெடுப்பு நடத்தினால் மனைவி அன்னம்மா, மூத்த மகன் பீட்டரின் ஐந்து நபர்களைக் கொண்ட ஓர் உப குடும்பம், இரண்டாவது மகன் டேவிட், நாலாவது மகன் என்றி என்றழைக்கப்படுகிற ஹென்றி, கடைசி மகள் மேரி இவர்கள் மட்டும் இருப்பது தெரியவரும். காணமற் போய்விட்ட மூன்றாவது மகன் பிலிப்பைப் பற்றியோ, அல்லது கல்யாணமாகி —சரியாகச் சொல்லப் போனால் குடும்பம் நடத்துகிற — மூத்த மகள் பாக்கியம், இரண்டாவது மகள் தெரசா இவர்களைப்பற்றியோ சொல்வது இலகுவானதல்ல.

செவுத்தி எசக்கியை 'அண்ணே' என்று கூப்பிடுவதில் உண்மை யிருக்குமாயிருந்தால் செவுத்திக்கு வயது அறுபதை விடக் குறைவு.

சமயம் இல்லாத ஆத்மா.

சாதியைப் போக்காட்டுகிற வேலையொன்று செய்திருக்கிறான் என்றால், அன்னாசி என்று யாவரும் செல்லப் பேரிட்டு அழைக்கிற அலிஸ் நோனாவுடன் குடும்பம் நடத்துவதை இது குறிக்கும். விட்டு விட்டு நடத்துவதைக் குறிக்க வினைச்சொல் வருமட்டும் நடத்துவது என்றே சொல்லிக் கொள்ள வேண்டும்.

இந்தத் தொடர்பின் தொடக்கம், செவுத்தி ஆணழகனாக இருந்த காலம். சினிமாப் பாட்டுக்காரர்கள் சொல்கிற மாதிரி இந்த உடலில் பூத்த மலர்கள் 'ரத்னே' என்றழைக்கப்படுகிற ரத்னபாலவும் 'விஜிதே' என்றழைக்கப்படுகிறவிஜிதபாலவும். இந்தப் பெயர்களிலேயே செவுத்தி மேலான அன்னாசியின் ஆதிக்கம் தெரிந்திருக்க வேண்டும்.

மூத்தவன் ரத்னேக்குப் புறக்கோட்டையில் காய்கறிக் கடையில் வேலை. இளையவன் விஜித, கெம்பா என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிற அர்நோலிஸ் சில்வாவின் வலது கை. இந்த கெம்பா, சாதாரண சட்டத்தை மதிக்கிற பிரஜையிலிருந்து, எஸ். பிக்கள் வரை எல்லாரும் மரியாதை செலுத்துகிற ஒரு குழுத் தலைவன் கொழும்பு, ஒரு சின்னச் சிகாகோ என்கிற மரியாதையைத் தேடித் தருகிற வீர புருஷர் வரிசையில் அவன் முதன்மையானவன்.

கெம்பாவுக்கு அடுத்ததாக குழுவின் அரியாசனமேற இருப்பவன் இந்த விஜித. அன்னாசியின் பாசத்துக்கும், பிரியத்துக்கும் விஜித ஆளாகியதற்கு இந்த வீரப்பதவியும், இந்த வீரப்பதவி கொணர்கிற செல்வமும் காரணம். மற்றது, ரேடியோக்கள், டேப்ரெகோடர்கள் தங்க நகைகள், பேனாக்கள் இத்தியாதி மற்றவர்களுக்குத் தெரியாமல் கைகளில் போய் வருவது ஒரு விசேஷ சுகானுபவம்.



எல்லாவற்றிற்கும் மேலாக அன்னாசி அவள் அளவிலேயே ஒரு தனிவிசை. இந்த விஜிதவுக்கும், கரீமுக்கும் தொடர்பு உண்டு. சந்ததி இடைவெளி கடந்த இந்தப் பிணைப்பு இறுக்கம் தொழில்ரீதியானது.

கரீமின் புத்தக விற்பனை இதில் சம்பந்தப்பட்டதில்லை.

தகவல்கள், வாங்குதல், விற்றல் ........ இந்த வகையான பிணைப்பு.

கரீம் ஐம்பது வயதாகியும் ஒரு தனிக்கட்டை. இந்த வயதில் உள்ள அநேக தனிக் கட்டைகள் போல் இடைக்கிடை இரட்டைக்கட்டையாகிறதும் உண்டு. அலிஸ் நோனா இதற்குதவி — உதவி மட்டும் தான்.

கரீம் விற்பதற்குச் சேர்த்துக் கொள்கிற புத்தகங்களின் மூலம் அநேகமாக செவுத்தி. செவுத்திக்கப்பால் அது நதிமூலம்.

எசக்கி ஒரு விற்பனைப்புள்ளி —எசக்கி வாசிப்பதென்பதில்லை.

கரீமுக்கு எவ்வாறோ, என்னென்ன புத்தகங்கள் எசக்கி மூலமாக பாதர் தியோபிளஸ் தலையில் கட்ட முடியுமென்பது தெரியும். கரீம் புத்தகக்கடையிலோ அல்லது வாசிகசாலையிலோ வேலை பார்த்ததென்பது கூட இல்லை. இங்கிலீஷ் எழுத்துக்கூட்ட மட்டுமே தெரியும். இருந்தாலும் புத்தகங்களை வடிகட்டும் கலையைத் தெரிந்திருக்கிறான்.

ஒரு புத்தகம் விற்பனையாகாமல் ஒன்றிரண்டு மாதமாகத் தங்குமென்றால் அது 'கதப் பொஸ்தவம்' இல்லை என்பது தெரிந்து போய்விடும். இன்னும் தங்குமென்றால் கரீமுக்கு அவைகளை 'மோந்து' பிடித்துத் தத்துவப் புத்தகங்களைப் பிரித்தெடுக்கத்தெரியும். கடைசிப் பரிசோதனையாக பாதர் வேண்டாம் என்கிற போது அது எதற்கும் உதவாத 'பொஸ்தவம்' என்பது தெரிந்து போகும், கரீம் அதை செவுத்தி கையிலேயே கொடுக்க, செவுத்தி, ஏற்கனவே இவ்வாறாகத் தங்கியிருக்கிற பழைய பேப்பர் கட்டோடு அதைப் போட்டு விடுவான், பின்னர் நிறுத்து விற்பதற்கு. பாதர் தியோப்பிளஸ் — எசக்கி தொடர்பை இந்தக் கட்டத்தில் சொல்லிவிட்டால் வசதியாகப் போய்விடும்.

ஒவ்வொரு ஞாயிறும் தேவாலயத்தைப் பெருக்குவதிலும், மலசல கூடந் துப்பரவு செய்வதும் எசக்கியின் திருத்தொண்டு. பாதர் இதற்குக் காசு தருவதும் உண்டு. இப்படித்தான் இந்தத் தொடர்பு தொடங்கியது. பாதர் எசக்கியில் அன்பு கொண்டது எசக்கியின் கதைகளைக் கேட்ட பின்னர். எசக்கி எல்லாவற்றையும் பாதரிடம் சொல்லிவிடுவான்.

பாதருக்கு எசக்கியைத் திருத்தியெடுப்பது ஒரு முக்கிய முயற்சி.

இது விடாமுயற்சியாய் இருந்தாலும் எசக்கியின் மீது நம்பிக்கையும் பாசமும் இருந்து வந்தது. மத்தேயுவில் தேவகுமாரன் இந்த விடா முயற்சியைப் பற்றித்தானே சொல்லியிருக்கிறார்! எசக்கி எல்லாவற்றையும் சொல்ல, அதில் திருத்தங்கள் செய்து உண்மையைக் கிரகித்துக் கொள்வார்.

பாதர் தலையில் புத்தகங்கள் தள்ளலாம் என்று கண்டு பிடித்தது கரீமின் அசல் மூளை.

ஒரு நாள் ஒரு மூளை அலை பாய்ந்தது கரீமுக்கு. தங்கிப் போயிருந்த புத்தகமொன்றை எசக்கி கையில் கொடுத்தான். 'சிலவேளை இந்த பாதர்மாருங்க இந்தமாதிரிப் பொஸ்தவம் படிப்பாங்க. நீயே பாதர் கிட்ட வித்துக்க' என்ற உடன்படிக்கையுடன். எசக்கி பாதர் தலையில் அதை வெற்றிகரமாகக்கட்டி ........அன்று சொர்க்கத்தில் பெருங்கொண்டாட்டம்.

சொர்க்கம்?

இதை முடித்துவிட்டுச் சொல்கிறேன்.

அதிலிருந்து பாதர் என்கிற விற்பனைப்புள்ளி உருவானது. இந்தப் புத்தக வியாபாரத்தின் கொடுக்கல், வாங்கல் பிசகுகள் சொர்க்கத்தின் அமுதத்தில் வெகு இலகுவாகக் கரைந்துபோகும்.

ஒட்டுமொத்தமாக, உலகம் கரீமின் காலடியிலென்று தெரிந்தே செவுத்தியும், எசக்கியும் அவனைத் தங்கள் குருஸ்தானத்தில் வைத்திருக்கிறார்கள். பல பிரச்சினைகளுக்கும் அவனிடம் தீர்வு உண்டு.

விசேஷமாக அமுதத்திற்கு வழி காண்பது.

சொர்க்கம் திறந்திருக்கிற நாளெல்லாம் அங்கேகூடி, அமுதம் பருகி அவர்கள் வாழ்ந்து கொள்வார்கள். பிழைப்பும் வாழ்வும் இந்த மூவரையும் பின்னி இழையோடுகின்றன.

கொழும்பில் கரையோரப் பொலிசிற்கும் பொன்னம்பலவாணேசருக்கும் நடுவில் இந்தச் சொர்க்கம் இருக்கிறது. முன்னரே கோடியிட்டுக் காட்டியதுபோல அமுதங் கிடைக்கிற சொர்க்கம். இங்கே தேவர்கள் வந்து, மசால் வடை, 'இஸ்ஸோ' வடை, சுண்டல் இத்தியாதி டேஸ்ட் அனுமானங்களுடன் கூடி அமுதம்பருகி ஆனந்திக்கும் பொழுது வர, சூரியன் எதிரே உள்ள கடலில் துறைமுகத்திற்கும் அப்பால் விழுந்து மறையவும், பொன்னம்பலவாணேசுவரரின் மணிச் சத்தம் தன்னைத்தானே சப்தித்துக் கொள்ளவும் சரியாக இருக்கும். தேவர்களுள் வித்தியாசங்கள் உண்டு. சிரட்டையில் அமுதம் பருகுகிறவர்கள், கோப்பையில், வெறுமே பருகுகிறவர்கள், சுண்டல்காரர்கள், வடைகாரர்கள், ஆண்கள், பெண்கள். நாக்கு நனைக்கிறவர்கள், குடிகாரர்கள், வெறிகாரர்கள். மற்ற வித்தியாசங்கள் தனி.

திருமணங்கள் மட்டுமல்ல; பிறப்புகள், இறப்புகள் பலவும் இந்த சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன. சண்டை, சமாதானம் பலவும் இங்கே உண்டு.

தேவர்களின் ஆயாசம் தீருகிற சத்தமும் ......,..

காரியாலய வேலை இப்போது தான் முடிந்து வீட்டை நோக்கிப் போகிறவர்களாலும், வேலை வெள்ளனவே முடிந்து இந்த நகரத்தைச் சுவைப்பதற்காகப் புறப்பட்டிருக்கிற அதிர்ஷ்டசாலிகளாலும் பிதுங்குகிற பஸ்கள்.

லொறிகள்.

சைக்கிள்கள்.

கார்கள்.

பாதசாரிகள்.

கொழும்பின் வெக்கை அல்லது மழை, தூசு அல்லது சகதி எல்லாமும் சொர்க்கத்தின் பின்னணி.

பாதர் தியோபிளஸ் சொர்க்கத்தை ஒரு நரகம் என்று

(11ஆம் பக்கம் பார்க்க)

# ஒப்பரேஷன் — லிபரேஷன்

சார்ள்ஸ்

வடமராட்சியில் 1987 இல் மே 26 தொடக்கம் நிகழ்ந்த இராணுவ நிகழ்வால், பின்னைய காலகட்டத்தில் இம் மண்ணில் பல்வேறு பாதிப்புகளுக்கு மக்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இவ் இராணுவ நிகழ்வு 'ஒப்பரேஷன் லிபரேஷன்' எனப் பெயர் சூட்டப்பட்டு பல அப்பாவித் தமிழர்களைப் பலி கொண்டதாக மேலோங்கிற்று. இவ் இராணுவ நிகழ்வு ஏற்பட்ட விதம் பற்றியும், இதனால் பாதிக்கப்பட்ட மக்களையும் பொருளாதார வளங்களையும் ஆராய்வு செய்தல் வேண்டும். இதனூடாகவே மீண்டும் வடமராட்சி மண்ணைச் செழிப்பாக்கலாம்.

## இராணுவ வன்முறையின் அதி உச்சக் கட்டம்

ஈழப் பிரதேசம் பூராக சிறிலங்கா இராணுவத்தின் அதி உச்சப் போர்க்காலமாக 1987 விளங்கியது. ஈழத்தின் வடக்குப்பகுதியில் குடா நாட்டில் இராணுவம் சுயாதீனமாக உலாவ முடியாதவாறும் போராளிகளால் இராணுவத் தாக்குதல்களை முறியடிக்கும் வண்ணமாக கட்டுப்பாட்டு நிலையில் யாழ்குடா இருந்தது. இப்பகிரங்க இராணுவ ரீதியிலான தோல்வியை அரசினலும் பாதுகாப்புத்துறையினலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. விளைவாக எத்தனை உயிர்ப்பலிகள் நடந்தாலும் 'இராணுவ ரீதியில் வெற்றி' பெற சிறிலங்கா அரசும், இராணுவமும் முனைந்தன. இவ்இராணுவ நிகழ்வு வடமாராட்சியில் ஒப்பரேஷன் லிபரேஷனாக பல அப்பாவிகளின் உயிர்களைப் பலி கொண்டது.

இவ்இராணுவ நிகழ்வால் வடமராட்சிக்கு ஏற்பட்ட பாதிப்புகள் சொல்லிலடங்கா. ஆயினும் உடனடிப் பாதிப்புகளை விட பின்னைய காலப் பாதிப்புகளே இவ் இராணுவ நிகழ்வால் கூடியது. ஆயிரத்துக்குட்பட்ட மனித உயிர்கள் பலியாக்கப்பட்டிருப்பினும் ஒரு சகாப்தத்தின் தலைமுறையே இந்த நிகழ்வால் அழித்தொழிக்கப்பட்டு விட்டது. இதனை ஆய்வோமாயின் உடல் ரீதியான பாதிப்பு, உளரீதியிலான பாதிப்பு, பொருளாதார ரீதியிலான பாதிப்பு, கல்வி இழப்பு, கற்பு இழப்பு (சுய பாதிப்பாக) இப்படியான பாதிப்புகள் தான் அநேகம்.

## ஒப்பரேஷன் — லிபரேஷன் இராணுவ முன்னேறல்

வடமராட்சியைக் குடாநாட்டுடன் இணைக்கும் வல்லைவெளிப் பாலமும், வரணிப் பாதையுமே இராணிவத்தால் முதலில் முற்றுகையிடப்பட்ட பகுதிகளாகும். ஆயினும் போராளிகளின் எதிர்த்தாக்குதலால் இராணுவம் நிலைகுலைந்து இப் பாதைகளை வெடிவைத்துத் தகர்த்தது. இதன் மூலமாக வடமராட்சி எதுவித தொடர்புகளுமின்றி கட்டுப்பாட்டை இழந்தது. வல்வெட்டித்துறை இராணுவ முகாம் மூலம் வெளியேறிய இராணுவம் பலத்த இழப்புகளின் மத்தியில் முன்னேறியது. இந்த இராணுவ அணியால் 3 நாட்களிலும் பொலிகண்டி, கொற்றுவத்தை, வல்வெட்டி போன்ற இடங்களில் இருநூறுக்கும் (200) மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். தொண்டைமானறு முகாம் மூலம் வெளியேறிய இராணுவம் அல்வாய், கரவெட்டி வரை முன்னேறியது. இடையிடையே ஹெலிகொப்டர் மூலம் இராணுவம் இறக்கப்பட்டு உடனடி முகாம்கள் அமைக்கப்பட்டன. இதன் மூலமே இந்த இராணுவ நிகள்வு மேலோங்கியது.

## மனித உயிர்ப்பலி கொள்ள பல ஆயுதங்கள் !

ஆறு குண்டு வீச்சு விமானங்களும் மூன்று 'அவ்ரோ' இராணுவ விமானங்களும் மூன்று கண்காணிப்பு சிறு விமானங்களும் பன்னிரண்டு ஹெலிகொப்டர்களும் கடற்படையின் மூன்று பீரங்கிக் கப்பல்களும் இவ் இராணுவத் தாக்குதலில் பங்கெடுத்தன. இவ் இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பாக இராணுவத் தலைமை அதிகாரி சிறில் ரணதுங்க கட்டளை ஆணையாளராக பலாலி இராணுவ முகாமிலிருந்து செயற்பட்டார். இவர் நடவடிக்கைக்குப் பொறுப்பின்றி கட்டளை ஆணையாளராக (Commanding Officer in Charge) மட்டுமே செயற்பட்டார். முன்னேறிச் செல்லும் இராணுவ அணிகளுக்கு இரு பிரிகேடியர்கள் பொறுப்பேற்றனர். வல்வெட்டித் துறையிலிருந்து தொண்டைமானறு ஊடாக பருத்தித் துறை செல்லும் இராணுவ அணிகளுக்கு பிரிகேடியர் சிறில் ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டார். பருத்தித்துறை ஊடாக முழுவடமராட்சி பிரதேசத்தைக் கைப்பற்றும் அதிரடி இராணுவ அணிகளுக்கு பிரிகேடியர் கொப்பேக்கடுவ நியமிக்கப்பட்டார். (ஒப்பரேஷன் லிபரேஷன் வெற்றியின் பின்னரே இவருக்கு பிரிகேடியர் பதவி வழங்கப்பட்டது)

இவ் இராணுவ நடவடிக்கையால் உயிர் இழப்புகள் பலவாக இருப்பினும் எதிர்கால பாதிப்புகளே வடமராட்சியை வாட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றை நிவிர்த்தி செய்ய முழுமையான அமைதி இம் மண்ணில் நிகழவேண்டும்.

## கல்வி இழப்பு

வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன், கல்சாரி, பொம்மர் தாக்குதலுக்கு உட்பட்டு நிர்மூலமாக்கப் பட்டது. வல்வை மகளிர் கல்லூரி எரிக்கப்பட்டது. புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஷெல் வீச்சுக்கு இடிபாடடைந்தது. இப் பாடசாலைகளைத் தவிர மற்றைய பாடசாலைகளிலும் ஏராளமான பொருட்சேதங்கள் ஏற்பட்டன. இத்துடன் பல பாடசாலைகளில் இராணுவம் முகாமிட்டுக் கொண்டது: நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், புனித யாக்குரு வித்தியாலயம், போன்ற பாடசாலைகளில் தற்காலிக யுத்த முகாம்கள் நிர்மாணிக்கப்பட்டன. இவ்வகையில் பாதிக்கப்பட்ட பாடசாலைகள் மீளப் புனருத்தாரனஞ் செய்யப்படாமலிருப்பது கல்வி ரீதியான பாதிப்பை தற்கால மாணவ சமுதாயத்துக்கு ஏற்படுத்தியுள்ளது.

## பொருளாதார இழப்பு

வல்வெட்டித்துறையும் பருத்தித் துறையும் மீன்பிடிப் பிரதேசங்களாகும். கடல் பாதுகாப்புச் சட்டத்தினுல் பாதிப்புக்குள்ளாகியிருந்த மக்களின் நிலை இந்த இராணுவ வன்முறையால் மேலும் பாதிப்புக்குள்ளானது. உழைப்பு இல்லாவிடினும் உழைப்பின் கருவிகள் இக்கால வேளையில் அழிக்கப்பட்டன. கரவெட்டி, கரணவாய், வதிரி போன்ற தோட்ட நிலங்கள் இராணுவ செயின் வாகனங்களின் பாதிப்புகளுக்கு உட்பட்டு தரிசு நிலங்களாகக் காட்சியளிக்கின்றன.

## கலாசாரப் படுகொலை

கலாசார ரீதியான பாதிப்புகளாக ஏராளமான நிகழ்வுகள் நடந்துள்ளன. அல்வாய், முத்துமாரியம்மன் கோயிலின் மீது ஏவப்பட்ட ஷெல்லினுல் அறுபது பொது மக்கள் பலியாகினர். இக்காலவேளையிலேயே (27. 5. 87இல்) யாழ்ப்பாணம் சிவன் கோயிலின் மீதும் வீசப்பட்ட பீப்பாக் குண்டினுல் பலர் மாண்டனர். நமது மண்ணில் கலாசாரச் சின்னங்களைக் கூட விட்டு வைக்கவில்லை. வல்வை சிவன் கோயிலின் மேல் கொடூரமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## உளரீதியிலான பாதிப்பு

வடமராட்சி பூராக இராணுவக் கட்டுப் பாட்டின் கீழ் கொணர்ந்த பின் 5000 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 2000 க்கும் மேற்பட்டோர் சிங்களச் சிறைகளுக்கு (பூசா, பெல்வத்தை, மகசின்) கப்பல் மூலமாக அனுப்பப்பட்டனர். இவர்களிற் பலருக்கு மனோரீதியிலான பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன. பொருளாதார ரீதியாக வளங் கொழித்த வல்வெட்டித்துறை இவ் இராணுவ நிகழ்வால் சிதைத்தழிக்கப்பட்டது. கரணவாய், கரவெட்டி போன்ற இடங்களில் சிறிய தொழிலகங்களும், பேக்கறிகள், வியாபார நிலையங்களும் அழிக்கப்பட்டன.

## சந்ததி மறவாச் சரித்திரமாக!

நூற்றுண்டு காலஞ் சென்ருலும் வடமராட்சி மண்ணில் நிகழ்ந்தேறிய இக் கொடூர 'ஒப்பரேஷன்—லிபரேஷனின்' பதிவுகள் மறைய மாட்டாது. உடல், உள, பொருளாதார, கல்வி, கற்பு இழப்புக்களினூடாகவும் கலாசார அழிவுகளினூடாகவும் ஒப்பரேஷன்—லிபரேஷன் நம்மனக் கண்களிலிருந்து அகல்வது கடினமாகும். □

# இலங்கையில் இந்திய இராணுவத்தின் மனோநிலை — சண்டே ரைம்ஸ் தரும் தகவல்

சிவா

இலங்கையிலிருந்து அமைதிப்படையை சிறிது சிறிதாகவும் அமைதியாகவும் எதுவித சலசலப்பு இன்றியும் இந்திய அரசாங்கம் வாபஸ் பெற்றுக் கொண்டு இருக்கிறதாக கடந்த வாரம் சண்டே ரைம்ஸில் எழுதியுள்ள இந்திரானில் பனேர்ஜி என்பவர் கூறுகிறர். அவர் பொதுவாக இந்திய இராணுவத்தின் மனோநிலை, இலங்கை அரசியல், இந்தியாவின் போக்கு போன்றவற்றையெல்லாம் தனது கட்டுரையில் கோடிகாட்டிச் செல்கிருர். ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகள் வெளியேறியபோது நிகழ்ந்த ஆரவாரங்களோ, வியட்நாமிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியபோது அமெரிக்க மக்கள் வெளிப்படுத்திய குதூகல வைபவங்களோ இல்லாமல் இந்தியா தனது படைகளை வாபஸ் பெற்றுக் கொண்டிருக்கிறது.

48,000 துருப்புகளைக் கொண்ட தனது படையிலிருந்து கடந்த மாதம் 8000 துருப்புகளை இந்தியாவுக்கு அனுப்பியுள்ளதாகவும், இன்னும் இரண்டொரு மாதங்களில் 10,000 வரையிலான துருப்புகள் வாபஸ் பெறப்படலாம் என்றும், இப்படியே இந்தியா தனது படைகளை வாபஸ் பெற்று, இவ்வருட முடிவில் ஒரு சிறு படையை இங்கு அடையாளமாக நிலைகொள்ளலாம் என்றும் அவர் அறிவிக்கிருர். இதற்குரிய காரணங்கள் என்ன? இலங்கையில் கடமையாற்றும் இராணுவவீரர்களின் மனோநிலை என்ன நிலையில் உள்ளது என்பது பற்றியும் அவர் பல இராணுவ தளபதிகள் சிப்பாய்கள் போன்றோரின் அபிப்பிராயங்களைக் காட்டி விளக்கிச்செல்கிருர். அவற்றைச் சுருக்கமாக இங்கே தருகிறோம்.

அண்மையில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய இராணுவ தளபதி ஒருவர் பின்வருமாறு சொன்னர்: "நாங்கள் இன்று இலங்கைஅரசாங்கத்தாலும் வேண்டப்படாதவர்கள் அங்குள்ள பெரும்பான்மை மக்களும் எங்களை வெறுக்கிருர்கள். அத்தோடு எங்கள் நாட்டவரே நாங்கள் இலங்கையில் இருப்பதை விரும்பவில்லை."

இவ்வாறு அவர் கூறியதற்கு காரணம் என்ன? இன்று இலங்கையில் நிலவும் சிக்கல் மிக்க அரசியலே. இதுபற்றி இலங்கை அமைதிப்படைக்குத் தலைமைதாங்கும் தளபதி கல்கற் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தபோது "இலங்கைக்கு அனுப்பப்பட்ட அமைதிப்படையின் இராணுவ ரீதியான நடவடிக்கை முடிந்துவிட்டது என்றே கூறவேண்டும். ஆனல் இலங்கைத் தமிழரின் பிரச்சினை அரசியல்-இராணுவம் சம்பந்தப்பட்டது. இலங்கையிலிருந்து அமைதிப்படை வெளியேறுவது என்பது கூட உயர்மட்ட இலங்கை இந்திய அரசியல் செயல்பாட்டிலேயே தங்கியுள்ளது" என்ருர்.

"இராணுவ ரீதியாக பல இழப்புகள் இந்தியப்படைகளுக்கு நேர்ந்துள்ளது. ஆயினும் அவர்கள் தமக்கு கொடுக்கப்பட்ட பணியினை அச்சமின்றி நிறைவேற்றியே வருகின்றனர். அவர்களது வீரம் உயர் கட்டுப்பாடுடையதாய் உள்ளது" என்றும் அவர் கூறினர்.

ஆனல் அமெரிக்கப்படைகளுக்கு வியட்நாமில் நேர்ந்ததோ, சோவியத் படைகளுக்கு ஆப்கானிஸ்தானில் நேர்ந்ததோ இந்தியப்படைகளுக்கு நிகழக்கூடாது. அதற்குரிய ஒரேவழி காடுகளில் ஒளிந்துள்ள எல்.ரி.ரி.ஈ. யினர் மேலும் தலையெடுக்க முடியாதபடி அமைதிப்படையினர் தமது முழுப்பலத்தையும் ஒன்று குவித்து அவர்களைத்தாக்கி அழிக்கவேண்டும்.

ஆனல் இது சாத்தியமா என்பதே அடுத்த கேள்வி.

(11ஆம் பக்கம் பார்க்க)

# சோவியத் ராஜதந்திரிகள் வெளியேற்றம்

## தட்சர்-புஷ் தந்திரம்

கொர்பச்சேவ் பதவிக்கு வந்த பின்பு சோவியத் யூனியனின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளில் முக்கிய மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. குறிப்பாக சர்வதேச உறவில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. கொர்ப்பச்சேவின் வெளியுறவுக் கொள்கை அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அணிக்குள் குழப்பங்களையும் சிக்கல்களையும் ஏற்படுத்தியது. இதனை நிவர்த்தி செய்வதற்கு அமெரிக்கா பல புதிய தந்திரங்களைக் கையாள முனைகின்றது. அதில் ஒன்றே அண்மையில் சோவியத் இராஜதந்திரிகள் பிரித்தானியாவிலிருந்து வெளியேற்றப் பட்டமையாகும். தற்போது சோவியத் யூனியனின் செல்வாக்கு மேற்கு ஐரோப்பாவில் பெரிதும் வளர்ந்து வருகிறது. அதனைத் தடுப்பதற்காக பிரித்தானியா மூலம் அமெரிக்கா மேற்கொண்டுள்ள ஒரு நரித்தனமான இராஜதந்திர நடவடிக்கையே இது.

இதற்கான நீண்ட பின்னணியை சற்று சுருக்கமாக நோக்குவோம். இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்பு அமெரிக்கா தலைமையில் நேட்டோ அணியும், சோவியத் யூனியன் தலைமையில் வார்சோ அணியும் உருவாகின. சோவியத் யூனியனின் தலைமையிலான கொம்யூனிய ஆதிக்கப் பரவலைத் தடுப்பது நேட்டோவின் பிரதான கொள்கை என்று கூறப்பட்டது. ஐரோப்பாவை சோவியத்திடமிருந்து "பாதுகாத்தல்" அமெரிக்காவின் முதற் தர கடமை என்று அமெரிக்கா கூறியது.

"ஐரோப்பாவை பாதுகாத்தல்" என்ற அமெரிக்கா கூற்றின் உள்ளார்ந்த அர்த்தமும் நோக்கமும் என்னவெனில் சோவியத் யூனியனை ஐரோப்பாக் கண்டத்துக்குள் தோற்கடித்தல் என்பதுதான். அதாவது நேட்டோ அணிக்கு தலைமை தாங்கும் அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டத்திற்கு வெளியேயுள்ள நாடு. ஆனால் சோவியத் யூனியன் ஐரோப்பாக் கண்டத்துள் உள்ள நாடு. அமெரிக்கா கண்டத்தில் அமெரிக்காவின் பாதுகாப்பிற்கு குந்தகமான பெரிய எதிர் நாடுகள் எதுவுமில்லை. ஆனால் ஐரோப்பாவில் சோவியத் யூனியனுக்கு அருகே அதனுடன் நின்று யுத்தம் புரியக் கூடிய மேற்கைரோப்பிய நாடுகள் உண்டு. இந்த மேற்கைரோப்பிய நாடுகளை உதிரிகளாகவிடாது ஒன்றுதிரட்டி ஒரு பொதுவான இராணுவக் கொள்கைக்குக்கீழ் கொண்டு வந்துவிட்டால் இந்த மேற்கைரோப்பிய நாடுகளால் சோவியற் யூனியனை ஐரோப்பாவை விட்டு வெளியே முன்னேறுமலும், அதேவேளை அதனை ஐரோப்பாவினுள் தோற்கடிக்கவும் முடியும். அப்படியாயின் அமெரிக்கா உலகம் முழுவதும் தனது ஆதிக்கத்தையும், சுரண்டலையும் இலகுவாக்க முடியும். அவ்வாறான சுரண்டல் மூலம் வரும் சிறுபகுதி இலாபத்தை நேட்டோவின் இராணுவச் செலவீட்டுக்கு ஒதுக்குவது என திட்டமிட்டது.

சோவியத் யூனியன் தலைமைதாங்கும் ஏனைய வார்சோ ஒப்பந்த நாடுகள் அனைத்தும் சோவியத்தைவிட விஞ்ஞான—தொழில்நுட்ப வளர்ச்சியில் மிகக்குறைவானவை. மேலும் இந்நாடுகள் தமக்குத் தேவையானவற்றிற்கு சோவியற்றிடமே தங்கியிருக்க வேண்டும். இந்த வகையில் சோவியற்றிற்கு இந்நாடுகளால் தொழில்நுட்பப் பங்களிப்பு கிடைக்க முடியாதநிலை. சோவியத்திற்கு அருகிலுள்ள வார்சோ நாடுகள் சோவியத்தை பாதுகாப்பதற்கான யுத்தத்தடுப்பு வலயங்களாகப் பயன்பட்டன. ஆனால் அமெரிக்காவிற்கு அதன் ஏனைய நேட்டோ நாடுகளிடமிருந்து விஞ்ஞான—தொழில்நுட்ப உதவி பரஸ்பரம் கிடைக்கக் கூடிய நிலையிருக்கிறது. பொதுவாக உலகளாவிய தொழில் நுட்பத்திலிருந்து சோவியத் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்நிலையிற்தான் கொர்பச்சேவ் தனது புதிய வெளியுறவுக் கொள்கையை வகுத்தார்.



மார்கிரட் தட்சர்

முதலாவதாக ஐரோப்பாக் கண்டத்திலிருந்து, அமெரிக்க செல்வாக்கையும் அதன்பிடியையும் தளர்த்தி ஒரு பொது ஐரோப்பிய உணர்வையும் உறவையும் உருவாக்கி அதன் மூலம் ஐரோப்பாக் கண்டத்தில் சோவியத்திற்கு உள்ள எதிர்நிலையை வெற்றிகொள்ளல். சோவியத் யூனியனை குறிபார்த்த ஏவுகணைகள் மேற்கைரோப்பிய நாடுகளில் அமெரிக்காவால் பொருத்தப்பட்டுளன. இதனையெதிர்ப்பதற்கு சோவியத் யூனியன் தனது நாட்டிலும் ஏனைய கிழக்கைரோப்பிய நாடுகளிலும் பொருத்தியுள்ள ஏவுகணைகள் மேற்கைரோப்பிய நாடுகளை குறிபார்த்தவண்ணமுள்ளன. எனவே இதில் ஒரு யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதில் இழப்பு அமெரிக்காவிற்கல்ல மேற்கைரோப்பிய நாடுகளுக்கும் கிழக்கைரோப்பிய நாடுகளுக்குமே. இந்நிலையில் கொர்பச்சேவ் ஒரு திட்டத்தை முன்வைத்தார். அதாவது மேற்குறிப்பிட்ட ஏவுகணைகளை இருபகுதியும் அகற்றுவது அல்லது படிப்படியாகக் குறைப்பது. கொர்பச்சேவின் இவ்வறிப்பு மேற்கைரோப்பிய நாடுகள் மத்தியில் பெரும் கவர்ச்சியை ஏற்படுத்தியது. இத்துடன் இணைத்து கொர்பச்சேவ் பல உள்நாட்டு மாற்றங்களையும், உலக சமாதானத்தையும், அணுவாயுதக் குறைப்பு போன்ற கொள்கைகளையும் வெளியிட மேற்கைரோப்பிய நாட்டு மக்கள் மத்தியில் சோவியத் மீதிருந்த அச்சமும் பயமும் நீங்கத் தொடங்கின.

மேற்கைரோப்பிய நாடுகளுள் பிரச்சாரமைய நாடாக இருப்பது பிரித்தானியா என்ற உண்மையை கொர்பச்சேவ் நன்கு உணர்ந்திருந்தார் ஆதலினால் பிரித்தானிய மக்களைக் கவரும் வகையிலான திட்டங்களை அறிவித்தார். பிரித்தானியாவிற்கு விஜயங்களை மேற்கொண்டு அங்கிருந்து பல அறிவிப்புக்களை விடுத்தார். பிரித்தானியாவை மையமாகக் கொண்ட இவரது நடவடிக்கைகளால் சோவியத்திற்குச் சார்பான அபிப்பிராயத்தை ஐரோப்பாவில் உருவாக்கும் மையமாக பிரிட்டனின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் விளங்கின. சோவியத்தின் அணுவாயுதக் குறைப்புத் திட்டத்தால் கவரப்பட்டு மேற்கு ஜேர்மனி அமெரிக்காவால் முன்வைக்கப்படும் குறுந்தூர அணுவாயுத ஏவுகணைகளை நவீனமயமாக்கும் திட்டத்தை எதிர்த்துள்ளது. இந்த வகையில் நேட்டோ அணிக்குள் முரண்பாடுகளையும் குழப்பங்களையும் கொர்பச்சேவின் நடவடிக்கைகள் தோற்றுவித்துள்ளன.

**சி. சண்முகவடிவேல்**

சோவியத்தின் இத்தகைய போக்கால் ஐரோப்பிய நாடுகளிடமேற்பட்டு வரும் மாற்றத்தைக் கண்டு, அமெரிக்கா பெரிதும் கவலையடைந்தது. இதைப் பற்றி ஹென்றி கீஸிங்கர் பின்வருமாறு கூறினார். "அமெரிக்காவை ஐரோப்பாக் கண்டத்திலிருந்து பிரித்து வைப்பதே கொர்பச்சேவின் முக்கிய இராஜ தந்திர நோக்கமாகும். கொர்பச்சேவ் கூறும் உள்நாட்டு ஜனநாயக மாற்றமென்பது உண்மையில் ஜனநாயகப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதல்ல. மாறாக அமெரிக்காவிற்கு எதிரான மேலும் பலம்பொருந்திய ஓர் அரசாக மாறுவதற்கான திட்டமே அதுவாகும். எனவே அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் இதில் அசட்டையாக இருந்து விடக்கூடாது" என்று எச்சரித்தார்.

மேலும் ஜனாதிபதி புஷ்ஷினுடைய தேசிய பாதுகாபபு ஆலோசகர் செவெரோப்ற் (Seoweroft) கூறுகையில் கொர்பச்சேவின் தந்திரங்களுக்குப் பலியாகும் விதத்தில் பழைய ஜனாதிபதி றீகன் நடந்துள்ளார் எனக் குறைபட்டுள்ளார் அத்துடன் புஷ்ஷினுடைய வெளியுறவுக் கொள்கைவகுப்பு ஆலோசகர் பேக்கர் (Baker) பின்வருமாறு கூறினார். "ஐரோப்பிய மக்களுடைய உள்ளத்தை வென்றெடுப்பதில் கொர்பச்சேவ் வெற்றி பெற்றுள்ளார். இப்போது முக்கிய விடயம் என்னவெனில் இதனை தடுக்கவல்ல திட்டங்களை கைக்கொள்ள வேண்டியமை" என்று குறிப்பிட்டுள்ளார்.

## உருளும் உலகில்



கொர்பச்சேவ்

இத்தகைய பின்னணியில் வைத்து மார்கிரட் தட்சரின் அண்மைய நடவடிக்கைகளைப் பார்ப்போம். அண்மையில் கொர்பச்சேவ் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்தபோது பிரித்தானிய மகாராணியை சோவியத்திற்கு இராஜரீக விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்திருந்தார். பிரித்தானிய மக்கள் இத்தகைய குடிசார் பழமைகளைப் பெறுவதிற் பிரியர்கள். எனவே மகாராணியின் சோவியத் விஜயம் மேலும் சோவியத்மீதான நல்லெண்ணத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும். எனவே பிரித்தானியாவை மையமாகக் கொண்டு கொர்பச்சேவ் நடாத்தும் பிரச்சாரநடவடிக்கைகளை குலைப்பதற்கு, சோவியத்துடன் பிரித்தானியா பகைமையை வளர்க்கக்கூடிய நடவடிக்கைகளை புஷ்—தட்சர் கூட்டுத் திட்டங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன. அதில் ஒன்றே உளவாளிகள் என்பதன் பெயரில் சோவியத் இராஜதந்திரிகளை தட்சர் நாட்டை விட்டு வெளியேற்றினர். இந்த நடவடிக்கையின் மூலம் கொர்பச்சேவ் உண்மையான சமாதான விரும்பியல்ல, திரைமறைவில் பிரித்தானியாவிற்கு எதிராகச் செயற்படுபவர் என்ற நிலையை மக்கள் மத்தியில் தோற்றுவிப்பதாகும். தட்சரின் இத்தந்திரத்தினை தோற்கடிப்பதற்கு கொர்பச்சேவ் ஒரு மாற்றுவழியைக் கையாண்டுள்ளார். பதிலுக்கு தானும் பிரித்தானியஇராஜதந்திரிகளை சோவியத்தைவிட்டுவெளியேற்றியதுடன் பிரித்தானியாவின் நடவடிக்கை விசமத்தனமானது எனக் கண்டித்து அதற்கு தக்க மாற்று நடவடிக்கையாக 170 பிரித்தானியப்பிரஜைகளை சோவியத்தைவிட்டு வெளியேறுமாறு அறிவித்துள்ளார். இவ்வாறு கொர்பச்சேவ் 170 பேரை வெளியேறுமாறு அறிவித்தமையானது பிரித்தானியாவினுள் தட்சர்மீது சீற்றமேற்பட வழிவகுக்கும் என்ற நோக்கத்தைக் கொண்டதாகும். அதாவது நட்புக்கரம் நீட்டும் சோவியத்துடன் தட்சர் அரசு பிழையாக நடப்பதனாற்தான் சோவியத் இவ்வாறு கடும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது, நட்பை உடைப்பதில் தட்சர்தான் காரணம் என்ற அபிப்பிராய அலைகளை பிரித்தானியாவினுள் தோற்றுவிக்கலாமென கொர்பச்சேவ் கணக்குப்போட்டிருக்க வேண்டும்.

அணுவாயுத ஒழிப்புப்பற்றி தட்சரிடம் பத்திரிகையாளர் கேள்விகேட்ட போது, 'அணுவாயுதத்திற்கு அஞ்சித்தான் போர் நடைபெறுதுள்ளது. சமாதானத்தை விரும்புகிறபடியால் அணு ஆயுதத்தை விரும்புகிறேன்' என்று தற்போது வெளிப்படையாகவே இப்படி ஆயுத உற்பத்தியை நியாயப் படுத்தும் கேவலமான நிலை வந்துள்ளதென்றால், இவர்களின் யுத்தப்போக்கை பச்சையாகவே அம்பலப்படுத்தும் நிலையை உருவாக்கியதில் கொர்பச்சேவின் தந்திரோபாயத்திற்கு வெற்றியேற்பட்டுள்ளது என்றே கூறவேண்டும். □

## மொழி

பூமியில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மொழி உண்டு. உலகில் முதல்மொழி இயற்றப்பட்ட நாடாக கருதப்படுவது சீனு ஆகும். சீன மொழி எழுத்துக்களைக்கொண்டு 40,000 சித்திரங்கள் வரையப்படுகின்றன.

உலகில் இன்று 4400 மொழிகள் பேசப்படுகின்றன. ஆபிரிக்காவில் 1000 மொழிகளும், இந்தியாவில் 800 மொழிகளும் பேசப்படுகின்றன. ஆங்கில மொழி பிறந்தது கி. மு, 900 ஆண்டுகளுக்கு முன்னர் எனக் கூறப்படுகின்றது.

— தி. தவபாலன்

## இலங்கையில்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிஸோராம், மணிப்புரி, நாகலாந்து, திரிபுரா போன்ற இடங்களில், இந்தியப்படை எதிர்கொண்ட அனுபவங்களிலிருந்து இது சாத்தியப்படாதென்பீற தெரிய வருகிறது. காரணம் மக்களாதரவுள்ள ஒரு கெரில்லாப் போராட்டக் குழுவைத் தோற்கடிப்பது என்பது, கஷ்டமே. ஆனல் இந்தியப்படை அனுபவிக்கும் துன்பம், அமெரிக்கர் வியட்நாமில் அனுபவித்த கஷ்டங்களேயோ, சோவியத்படை ஆப்கானிஸ்தானில் எதிர்கொண்ட இடர்களேயோ விடக் குறைவானதே என்றுலும் இலங்கையில் அவர்களது நிலே, குரூரமானதும் தனியானதும் என்றே கொள்ள வேண்டும்.

அதிகமாக இன்று வவுனியாக் காடுகளிலேயே போராட்டம் நடந்துகொண்டிருக்றது. ஆனல் இந்தக் காடுகளில் நிலவும் உஷ்ணமும், அதைச் சுமந்துவரும் காற்றும் ஒவ்வொரு இராணுவ வீரனேயும் தாகவிடாயால் தவிக்க வைக்கிறது. எதிரியின் தாக்குதலே விடத் தண்ணீர்த் தாகமே மிகக் கொடியதாய் உள்ளது. எல்லாத் தண்ணீர்க் குழிகளும் வரண்டிருப்பதே இதற்குக் காரணம். இந்த நிலையில் தண்ணீருக்கு அலேயும்போது ,கெரில்லாவால் இவர்களே முதலில் தாக்கப்படுபவர்களாயுள்ளனர். அத்தோடு இராணுவத்திற்கு அழிவு, அதிகமாக கண்ணிவெடிகளாலேயே ஏற்படுகிறது. இதன்மூலம் அவயவங்களே இழக்கும் இராணுவவீரர் பலவித மனச்சிக்கலுக்குள்ளாகின்றனர். இருபது வயதுடைய கோர்க்கா பிரிவைச் சேர்ந்த சுரேந்திர கேசர் ராய் என்பவர், தேடுதல் வேட்டையின்பின் காட்டிலிருந்து திரும்பிய முன்னிரவில் இப்படி ஒரு கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளானர். அவரது கால் முழங்காலுக்குக் கீழ் கழற்றப்பட்டது. இதுபற்றி அவர் குறிப்பிட்டபோது "நான் ஒரு துரதிர்ஷ்டசாலிதான்" என வருந்தினர்.

"கண்ணிவெடிகளேக் கண்டுபிடிக்கும் கருவிகள் கூட பயனற்றயவையாகி விட்டன" என்று தளபதி கரோச் என்பவர் கூறினர். காரணம் கெரில்லாக்கள், இப்பொழுது லோகத்தாலான சுவிட்சுகளே கைவிட்டு மரத்தாலானவற்றையே பாவிக்கின்றனர். அத்தோடு வெடிப்பொருட்கள் மரங்களிலும் தொங்கத் தொடங்கியுள்ளன. தளபதி கரோச் மேலும் தெரிவிக்கையில் "கெரில்லாக்கள் பாவிக்கும் ஆயுதங்களோடு ஒப்பிடும் போது நாம் பாவிக்கும் ஆயுதங்கள் மிகப்பின் தங்கியவை" என்றும் குறிப்பிட்டார்.

இவையே இன்று இந்தியப்படைக்கு பாதகமாயுள்ளன.

இறுதியாக இலங்கை நிலே பற்றி இந்திய இராணுவத்தின் உத்தியோகத்தர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் ஒவ்வொரு குழுவும் ஒன்றையொன்று அழிக்கும் வேலேயில் ஈடுபட்டு உள்ளது. இது தவிர்க்க முடியாதது. இதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது" என்ருர். □

## சொர்க்கம்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்கிருர். இவற்றை மூடிவிடும்படி பெரிய மனிதர்கள், ஆளுமன்றப் பிரதிநிதிகள், மந்திரிகள் எல்லாரையும் கேட்டபடி இருக்கிருர்.

ஏன்? இந்த எசக்கியையே அவரால் தடுத்து நிறுத்த முடியாமலிருக்கிறது. எல்லாவற்றையும்விட அங்கே பெண்களும் இருக்கிருர்களே! கடவுளே! மிகமோசம்!

சொர்க்கத்தின் அமுதபானுதி கடன்கள் முடிந்து எசக்கி எப்படியும் தன்வீடு ஒழுங்காப் போய்ச்சேர்ந்துவ்டுவான்.

செவுத்தி சிலவேளேகளில் எங்கேயாவது விழுந்து விடுவான். ,செவுத்தி விழுந்தால் விழுந்ததுதான். இப்படி விழும்போது, அலிஸ் நோனவிடம் போய் இந்தச் செய்தியைச் சொல்லும் கஷ்டமான கடமை எசக்கி தலேயில் விழுந்து போகும். அவள் எசக்கியைத்தான் முதலில் பேசுவாள், அவன் முதலில் எதிர்ப்படுவதால். செவுத்தி விழுந்தஇடத்தைச் சரியாகச் சொல்லமுடியாத நிலேயில் அவன் இருக்கும் கஷ்டம் வேறு. இது காரணத்தால் அடுத்தநாள் அவள் கண்ணில் எதிர்ப்பட்டால் இன்னமும் பேச்சு வாங்க வேண்டிவரும்.

இதைத் தவிர்க்க எசக்கிக்கு இரண்டு மாற்றுகள். ஒன்று சொர்க்கம் போகிறதை நிற்பாட்டுறது; மற்றது செவுத்தியைத் தவிர்ப்பது. இரண்டும் முடியாதென்பது செவுத்திக்கும் நன்ருகத் தெரியும்.

எவ்வாருே அடுத்த நாள் ஓவர்சீயர் செக்ரோல் எடுக்கிறபோது இரண்டுபேரும் நிற்பார்கள். கரீம், நிதானமாக நடந்து இரவுபகலாகத் திறந்திருக்கும் ஒரு ஹொட்டேலின் அவனுக்கென்றே உள்ள தகரப் பொந்தில் போய்ப் படுத்துவிடுவான் — தனிககட்டையாய் உள்ளபோதெல்லாம்.

(தொடரும்) □

## தொடர்பு சாதனம்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதுமான தாயில்லே. பல்நெறி சார்ந்ததாக இருத்தல் வேண்டும். உதாரணமாக வரலாறு, அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு, கலே இலக்கியம், அறிவியல், சமயம், தத்துவம், தொல்பொருள் இயல் போன்ற பல துறைகள் பற்றியும், அண்மைக்காலச் செய்திகளே யுள்ளடக்கிய பூரணமான ஓர் அறிவு இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான், ஆய்வறிவு ரீதியாக — இன்டலெக்சுவலி — பகுத்தாயவும், தேர்ந்தெடுக்கவும் தகைமையைப் பெற முடியும்.

□ □

சமுதாயத்தில் மாற்றத்தை அல்லது அபிவிருத்தியைக் கொண்டு வருவதற்கு முன்னர், நம்மில் மாற்றத்தை நாம் கொண்டுவரவேண்டும்.

அதே வேளேயில், சமுதாய மாற்றத்துக்கு அல்லது அபிவிருத்திக்கு வெகுசனத் தொடர்பு சாதனங்கள் எடுத்த எடுப்பிலே உதவமுடியுமா ? என்பதும் ஒரு கேள்வி.

சிறிது சிறிதாகவே இந்த மாற்றத்தை இந்த வெகுசனத் தொடர்பு சாதனங்கள் கொண்டு வருகின்றன என்று ஆய்வாளர் தெரிவிக்கின்றனர்.

மக்கள் மாறுபட்ட கருத்தையுடையவர்களாய் இருந்தால், வெகுசனத் தொடர்பு சாதனங்கள் எவ்வளவு பிரச்சாரம் செய்தாலும், இலகுவில் மசிய மாட்டார்கள். எனவே, இவர்கள் தம்மைத்தாமே அம்மாற்றங்களேக் கொண்டுவரும் வரை வெகு சுட்டிலாக-வெகுநொய்மையாக பிரசாரத் தொனியின்றி மாற்றத்திற்கான வழிவகைகளே இந்த வெகுசனத் தொடர்பு சாதனங்கள் அளிக்க வேண்டும்.

மாற்றத்தை முற்றுமுழுதாக ஏற்படுத்துவது சாத்தியமில்லேயாதலால், மாற்றம் அல்லது அபிவிருத்திக்கு வேண்டியவை பற்றி அடிக்கடி ஆணித்தரமாக எடுத்துக் கூறும் பொழுது சில அசைவுகளேத் தளர் நிலேகளேக்கொண்டு வரலாம் என்பர். வெவ்வேறு ஊடகக் காரணிகள் மூலம் இந்தச் சலனங்கள் ஏற்படுகின்றன என்பர்.

(அ) தனிநபர் ஒருவரின் முற்சார்பான போக்குகளும், தேர்ந்தெடுத்த வெளிப்பாடு, நுண்ணுக்கு (அகக்காட்சி). தேக்கிவைத்தல் ஆகியவற்றின் விளேவாக அமையும் போக்கு.

(ஆ) எக்குழுவில் அங்கத்துவம் வகிக்கிருரோ, அக்குழுவின் நெறிமுறைகள்.

(இ) தொடர்பு கொள்ளப்படும் உள்ளடக்கத்தினேப்பற்றி இபர் களுக்கிடையே பரிமாறப்படும் செய்திகள்.

(ஈ) அபிப்பிராய தலேமைத்துவம்.

மேற்சொன்னவை ஜே. டி. ஹலோரான் என்பவரால் "திஎபெக்ட்ஸ் ஒப் மாஸ் கொம்யூனிக்கேஷன்"(The Effects of Mass Communication) என்ற 'லிசெஸ்டற்' பல்கலேக்கழக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவற்றை இன்னெரு மொழியில் கூறினல் —

எமது பின்னணியும் அனுபவமும்.

எமது அயலாரும், அவர்கள் என்ன நினேக்கிருர்கள் என்பதும்.

நமது அலுவலகங்களிலும், பிரயாணத்தின்போதும் சம்பாஷணேகளின்போதும் யார்யாரிடம் இந்தச் செய்திகள் பற்றிக் கதைக்கிரேமோ அவர்களின் கருத்தும்.

நாம் மதிப்பதும், நம்புவதுமானவர்களின் கருத்துக்கள்.

ஆகியன இந்தக் காரணிகள் ஆகும்.

நம்மில் சிலர் நினேக்கலாம்—

அபிப்பிராயத்தை உருவாக்குவதோ, சமுதாயத்தை அபிவிருத்தி செய்வதோ, மாற்றுவதோ நமது தொழில் அல்ல என்றும், உண்மை விபரங்களே அப்படியே கொடுத்துவிட்டால் போதுமானவை என்றும் கூறலாம்.

ஆனல், உண்மை என்னவென்ருல் 'உண்மையான விபரங்கள்' (relevant facts) எனக் கருதப்படும் விபரங்களே இனங்கண்டு கொள்வது அவ்வளவு இலகுவானதல்ல;

ஏனெனில், நாம் விரும்பிஞலோ, விரும்பாவிட்டாலோ வெகுசனத் தொடர்பு சாதனங்களும், ஏனேயவற்றுடன் சேர்ந்து சமுதாய மாற்றத்துக்கு உதவுகின்றன என்பது தான் உண்மை.

இன்றைய வெகுசனத் தொடர்பு சாதன ஊழியர் ஒருவர் புதிய உலகம் ஒன்றிலே வாழ்கிருர் எனலாம். உலகளாவிய விதத்திலே உடனடியாகவே தகவற் பரிவர்த்தனே செய்யக் கூடிய சூழ்நிலேயிலேவாழ்கிருர்.

இன்று உலகமே ஒரு கிராமமாகி விட்டது. □

### 23-5-89 செவ்வாய்

ஹர்த்தாலினல் கடந்த ஒரு வாரகாலமாகச் செயற்படாதிருந்த யாழ். குடாநாட்டுப் பாடசாலேகள் இன்று முதல் மீண்டும் செயற்படத் தொடங்கின □ கிளிநொச்சிப் பிரசைகள் குழுவின் முன்னுள் பிரமுகரான பி. பரராஜசேகரம் சுட்டுக்கொல்லப்பட்டார் □ வற்ருப்பளே கண்ணகி அம்மன் கோவிலில் பொங்கல் உற்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது □ உலுக்குளம் பகுதியில் நடைபெற்ற மோதலில் பலியானவர்களுக்கு அஞ்சலியாக மன்னரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது □ நீர்வேலி, கரந்தன் பகுதிகள் சுற்றிவளேக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □ சாவகச்சேரியில் ஹர்த்தால் நடைபெற்றது □ கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற சிங்களக் குடியேற்றங்கள் குறித்து தமிழீழ விடுதலேப் புலிகள் அரசிடம் ஆட்சேபம் தெரிவித்தனர் □

### 24-5-89 புதன்

சம்பள உயர்வு கோரி பல்கலேக்கழக ஊழியர்சங்கம் வேலே நிறுத்தத்தில் ஈடுபட்டது □ சாவகச்சேரிப் பகுதிக் கடைகள் இன்றும் மூடப்பட்டிருந்தன. மறு அறிவித்தல் வரை திறக்கப்படக்கூடாதென்ற அறிவித்தல் கடைகளில் ஒட்டப்பட்டுள்ளது □ சம்மாந்துறையில் அமைதியை நிலேநாட்ட அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் மாநாடு ஒன்றை நடத்திஞர். 10 தமிழர்களும், 10 முஸ்லிம்களும், அப்பகுதி எம். பிக்களும் அதில் கலந்துகொண்டனர் □ இரவு யாழ். நகரப் பகுதியில் இரண்டு கிரனேட் வீச்சுகள் இடம் பெற்றன. மூன்று அமைதிப்படையினர் காயமடைந்தனர் □ சம்மாந்துறை, கல்முனேப்பகுதிகளில் ஹர்த்தால் நடைபெற்றது □ குமுதம், கல்கி, துக்ளக் சஞ்சிகைகள் விடுதலேப் புலிகளால் தடைசெய்யப்பட்டன □ முல்லேத்தீவில் இயக்க அலுவலகமொன்று தாக்கப்பட்டது □

### 25-5-89 வியாழன்

கனேடியத்தூதர் கரோலின் மஸ்கி குடாநாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளேப் பார்வையிட்டார் □ புலோப்பளே சுற்றிவளேக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □ அக்குறணேயில் முஸ்லிம் கிராமசேவகர் சுடப்பட்டதைக் கண்டித்து கண்டி, அக்குறணே பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது □ மாகாணசபை உறுப்பினர் கடத்தப்பட்டதைக் கண்டித்து ஈ. என். டி. எல். எவ். விடுத்த வேண்டுகோளே அடுத்து வவுனியா நகரம் இன்றும் ஸ்தம்பிதம் அடைந்தது □ திருமலே குண்டு வெடிப்பிற்கு தாம் பொறுப்பல்லவென விடுதலேப்புலிகள் அறிக்கை வெளியிட்டனர் □

### 26-5-89 வெள்ளி

மண்கலசத்துள் வைக்கப்பட்டிருந்த, 300 பழைமையான செப்பு நாணயங்கள் இமையாணனில் கண்டெடுக்கப்பட்டன □ கனேடியத்தூதர் யாழ். போதனு ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்து பார்வையிட்டார் □ யாழ். மாவட்ட அரசியல் இணேப்பாளராக ஏ. முருகநேசன் நியமிக்கப்பட்டுள்ளார் □ தமிழ் மக்களின் இன, கலாசாரத் தனித்துவம் பேணப்பட வேண்டும். அவர்களின் அமைதிக்கான தேடுதலில் கனேடியர்களான நாம் ஒன்ருக நிற்கிரேம் என கனேடியத் தூதர் கூறினர் □

### 27-5-89 சனி

அருகில் வேட்டுக்கள் கேட்டதன் பின்னர் தேடுதலும் இடம் பெற்றதில் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி விளேயாட்டுப் போட்டி இடையில் நிறுத்தப்பட்டது □ குடிமக்கள் தொண்டர் படை அணிவகுப்பு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய வட — கிழக்கு முதல்வர் அ. வரதராஜப் பெருமாள் 'நாகரிகமான, ஒழுக்கமான — குடியியல் சமுதாயமொன்றை உருவாக்குவது உங்கள் கடமை' எனக் குறிப்பிட்டார் □ மாகாணசபைகள் (பின் விளேவுகள்) சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது □ மாத்தளேயில் கண்ணி வெடியில் 4 இராணுவத்தினர் பலியாகினர் □

### 28-5-89 ஞாயிறு

குருநகர் நடன – நல்லிசைக் கலாமன்ற 15 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று நடந்தது □ மீன் வியாபாரி ஒருவர் சாவகச்சேரியில் சுட்டுக் கொல்லப்பட்டார் □ மாலே யாழ். கோட்டை இராணுவ முகாம் பக்கமிருந்து நான்கு பாரிய குண்டுச் சத்தங்கள் கேட்டன □ வண்ணர்பண்ணே அஞ்சலகத்தில் வேலே பார்க்கும் உதவி அஞ்சலதிபரான மு. குற்ருலிங்கம் இரவு சுட்டுக் கொல்லப்பட்டார் □ வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின குழுவொன்றுடன் சம்மாந்துறை சென்ருர். இதில் அமிர்தலிங்கமும் இடம் பெற்றிருந்தார் □

### 29-5-89 திங்கள்

மது — போதைப் பொருள் பற்றிய கருத்தரங்கு யாழ். தொடர்பகத்தில் ஆரம்பமானது □ அதிகாலே கரணவாய்ப் பகுதி சுற்றிவளேக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □ தமிழ் மக்களின் பாதுகாப்பை குடிமக்கள் தொண்டர் படையினர் உறுதி செய்யவேண்டுமென அ. வரதராஜப் பெருமாள் திருமலேயில் குறிப்பிட்டார் □ மாதுறு ஓயா திட்டத்தில் 75 வீதம் தமிழருக்கு ஒதுக்கப்பட வேண்டுமென இலங்கையிடம் கனடா வலியுறுத்தியுள்ளதாயும் இதைக் கனடாத் தூதர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்ததாகவும், செய்தி வெளியாகியது □

திசை
THISAI

# இசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

## பாடம் கற்காத பங்காளிகள்

''இணைப்பு எதிர்ப்பு பிரசாரத்துக்கு காலம் வந்துவிட்டது. ஜே. ஆர். ஜயவர்த்தன அபிப்பிராய வாக்கெடுப்பின் போது, இணைப்புக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய விரும்புவதாகக் கூறினர். இப்போது அந்தப் பிரச்சாரத்துக்கு நேரம் வந்துவிட்டது. ஜே, ஆர். ஜயவர்த்தன இதைச் செய்ய முன்வர வேண்டும். தற்போதைய ஜனதிபதியும் இணைப்புக்கு எதிரான பிரச்சாரத்தில் பங்குகொள்ள வேண்டும்'' — இவ்வாறு சிறிமாவோ பண்டாரநாயக்கா நாடாளுமன்றத்தில் மாகாண சபைகளின் அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமான சட்ட மூலத்தின் மீது நடந்த விவாதத்தின்போது பேசியுள்ளார்.

இவரது இந்தப் பேச்சு, அரசியல் நேர்மையீனம், அப்பட்டமான அயோக்கியத்தனம் என்பவற்றின் கூட்டு மொத்த வெளிப்பாடாய் அமைந்துள்ளது என்பது ஒரு புறம் இருக்க, இவர் தனது கடந்தகால அரசியல் வரலாறறில் இருந்து, எந்தவொரு பாடத்தையும் கற்றுக் கொள்ளவில்லை என்பதையும் காட்டி நிற்கிறது. அத்தோடு தனது அரசியல் நேர்மையீனத்துக்கும் யோக்கியமின்மைக்கும் மேலும் அவர் பங்காளிகளைச் சேர்த்துக் கொள்ள அழைப்பு விடுப்பதுதான் இன்னும் விசனத்துக்குரியதாகும்.

இவர் தற்போது பங்குக்கழைக்கும் பழைய ஜனதிபதி ஜே. ஆரின் கண்டியாத்திரைதான், இவரது கணவரின் பண்டா — செல்வா ஒப்பந்தந்தைக் கிழிக்க வைத்ததோடு அதன் பின் நேர்ந்த அனர்த்தங்களுக்கெல்லாம் காரணமாய் இருந்ததென்பதை இவர் மறந்துவிட்டார்.

இதே ஜே. ஆர். தான் இவரது தலையில் குட்டி, குடியுரிமை இழக்க வைத்து அரசியல் அஞ்ஞாதவாசம் புக வைத்தார் என்பதையும் மறந்துவிட்டார்.

இந்த அஞ்ஞாதவாசத்திலிருந்து மீண்டெழுவதற்காக கடந்த ஜனதிபதித் தேர்தலின்போது, யு.என்.பி. தரவிருப்பதையும் விட மேலாகத் தமிழ் மக்களுக்கு உரிமைகளையெல்லாம் அள்ளி இறைக்கப் போவதாக வாக்குறுதிக்குமேல் வாக்குறுதி கொடுத்ததெல்லாவற்றையும் மறந்துவிட்டார்.

அதன் தொடர் விளைவாக தமிழ்ப்பகுதி அரசியல் தரகர் ஒருவரோடு விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்காக வவுனியாக் காடுகளுக்குள் பிரவேசிக்கத் தயாராய் இருந்ததையும் மறந்துவிட்டார்.

இவர் இப்படி வரலாற்று அனுபவங்களிலிருந்து பாடங்கள் எதையும் கற்றுக்கொள்ளாது போகலாம். ஆனல் அத்தகைய அனுபவங்களிலிருந்து பாடங்கற்று சிறிது முற்போக்காக இயங்கப்பார்க்கும் இன்றைய அரசியல் தலைமைகளையும் தான் நிற்கும் சகதிக்குள் இழுத்துவிட முனைவதுதான் இவரது அயோக்கியத் தனத்தின் மிக அழுகிய பகுதியாகும்.

இந்த அழுகிய பகுதியே இன்று இலங்கை அரசியலை உள்ளரிக்கும் இனப்பிரச்சனை.

இது எப்போது அறுவைக்குட்படப்போகிறது?

# தொடர்பு சாதனங்கள் —

## பிரச்சினைகளும் தீர்வுகளும்

*இலங்கை மன்றக் கல்லூரியினில் அண்மையில் நடாத்தப்பெற்ற ''அபிவிருத்தியில் தொடர்பு சாதனங்களின் பங்களிப்பு'' என்ற கருத்தரங்கில் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளும் தீர்வுகளும் கீழே தரப்படுகின்றன.*

**பிரச்சினைகள்:**

1. இன்றைய சூழ்நிலை காரணமாக சரியான, உண்மையான செய்திகளைப் பெறமுடியாமையும், வெளியிடமுடியாமையும்.
2. தமிழ் வெகுசனத் தொடர்பு சாதனத் துறையில் தொழில்நுட்பக் கருவிகள் போதாமை; நவீன தொழில் நுட்ப உத்திகளில் பயிற்சியின்மை, தொழில் நுட்பவியலாளரின் பற்றுக் குறை.
3. வெகுசனத் தொடர்பு சாதனத் துறையின் முன்னேற்றத்தில் சமுதாயத்தின் குறைவான பங்களிப்பு.

* நல்ல ஆக்கங்களைப் படைப்பதற்கு கலைஞர்கள் முன்வராமை.

* வானெலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்கள் பற்றுக் குறை.

* மக்கள் தத்தம் நியாயமான தேவைகளை உரியவர்களுக்கு உரியமுறையில் எடுத்துச்செல்லாமை.

**தீர்வுகள்:**

1. செய்திகளை பரபரப்பூட்டும் வகையிலோ, உணர்ச்சி வசப்படுத்தும் வகையிலோ வெளியிடாமல், நிதானமான முறையில் மேற்கொள்ளல்.

2. தமிழில் கூடுதலாக இறக்குமதி செய்யப்படும் களியாட்ட கலை நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் போன்றவற்றை அகற்றி தொடர்புசாதனத் துறையினர் தமிழ்ப்பிரிவின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு நவீன கருவிகளைப் பெறவும், அவற்றைப் பயன்படுத்தவும் தொழில் நுட்பவியலாளர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயிற்சி வாய்ப்புக்களை அதிகரித்தல்.

3. வெகுசனத் தொடர்பு சாதனங்களின் சேவை பிராந்திய மட்டத்தில் பரவலாக்கப்படுவதற்கு பிராந்திய தொழில் நுட்ப நிலையங்கள், கலைக்கூடங்கள், செய்தி சேகரிப்பு நிலையங்கள் என்பன அமைக்கப்படுதல்.

4. சமுதாய அபிவிருத்தியில் பயனளிக்கக்கூடிய கைத்தொழில், விவசாயம், மீன்பிடி ஆகிய துறைகளில் அறிவைப் பெருக்கிக்கொள்ளக்கூடிய நிகழ்ச்சிகள் மூன்று மொழிகளிலும் அளிக்கப்படல் வேண்டும்.

5. முறைசார் கல்விமுறையில் அறிவை விருத்திசெய்யக்கூடிய வகையிலும் மாணவ சமுதாயத்தைச் சிந்திக்கவைக்கக்கூடியதுமான பயனுள்ள நிகழ்ச்சிகள் அளிக்கப்படுவதோடு அவை உகந்த நேரத்தில் கொடுக்கப்படல்.

6. வெகுசனத் தொடர்பு சாதனத் துறையில் உள்ள கலைஞர்களுக்கு பொருளாதார ரீதியில் ஊக்குவிப்பு அளித்து அவரது பங்களிப்பை அதிகரித்தல்.

## வேலை நிறுத்தம்

### ஈ. பி. ஆர். எல். எவ். ஆதரவு

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் ஊழியர்களின் சம்பள உயர்வு கேட்டு தேசிய ரீதியாக நடாத்தும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் இணைந்து போராடுவதானது ஒரு நல்ல அறிகுறியாகும். யாழ். பல்கலைக்கழக ஊழியர்களின், குறிப்பாக தொழில் நுட்ப வியலாளர்கள், லிகிதர்கள், வேலையாளர்களும் இணைந்து நடாத்தும் போராட்டத்தினை ஈழம் தொழிற்சங்க சம்மேளனத்தின் கீழ் அணி திரண்டுள்ள சங்கங்களும் தொழிலாளர்களும் முழுமையாக ஆதரிப்பதுடன் அவர்களின் போராட்டத்திற்கு பக்கபலமாக இருப்போம் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேம்.

## திருகோணமலை தப்பிப் பிழைத்தது!

நிலக்கரி எரி நிலையத்தினுல் திருகோணமலைக்கு வரவிருந்த பேராபத்து தவிர்க்கப்பட்டுள்ளதென தற்பொழுது அறியப்படுகின்றது.

இந்தத் திட்டத்தினை எதிர்த்து இலங்கைப் பத்திரிகையில் கட்டுரைகள் வெளிவந்தது தெருந்ததே.

பல்தேசிய நிறுவனங்களால் ஆரம்பிக்கப்படும் இத்தகைய திட்டங்களினுல் இயற்கைச் சூழலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் இக்கட்டுரைகளில் கோடிட்டுக் காட்டப்பட்டிருந்தன.

செல்வி ஷாமினி லூதர் இக்கட்ரைகளை வரைந்ததில் முன்னணி வகுத்தவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். கொழும்பிலிருந்து வெளிவரும் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையிலேயே இவரது கட்டுரைகள் வெளிவந்தன.

இப்பொழுது இந்த எரிநிலையம் தங்காலையில் நிறுவப்படலாமென கூறப்படுகிறது.

## நலன்விரும்பிகள் பிரசுரம்

'யாழ். இந்துவின் இன்றைய நிலை' என்ற தலைப்பில் ஒரு பிரசுரம் யாழ் இந்துவின் நலம் விரும்பிகளால் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பிரசுரத்தில் சிலரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு சில குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

முக்கியமாக இக் குற்றச்சாட்டுகள். யாழ். இந்துக்கல்லூரியில் இடம் பெறும் நிர்வாக ஊழல்கள் சம்பந்தமாக உள்ளன.

## நாம் எங்கே....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கைப்படையே எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம்'' — சம்மாந்துறைப் பகுதியிலுள்ள முஸ்லிம் அகதிகள் முகாம் ஒன்றில் காணப்பட்ட சுலோக அட்டை.

இணைப்பு அபிப்பிராய வாக்கெடுப்பை இலங்கை அரசு ஒத்திப்போடவேண்டும். வட–கிழக்கு மாகாணசபை அதிகாரப் பரவலாக்கம் தமிழ் மக்களுக்கு மட்டுமே செல்லலாகாது, அது அங்கு வதியும் எல்லா இனக்குழுக்களுக் கிடையேயும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
—இலங்கை முஸ்லிம் இளைஞர் ஒன்றியம் (பாமிஸ்)

''அரசின் திட்டமிட்ட நடவடிக்கையே சம்மாந்துறை இனக்கலவரமாகும்.
—மாகாண நிதி அமைச்சர் பெ. கிருபாகரன்.

## ஈ. என். டி. எல். எவ். அறிக்கை

கிழக்கில் தமிழ் — முஸ்லிம் மக்களிடயே மோதல்உருவான பின்புமுஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கென்று கூறிக்கொண்டு இந்தியப் படைக்குப் பதிலாக இலங்கைப் படையினரை வெளிக்கொணரச் சில சக்திகள் முனைகின்றன. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறேம்.

## உராய்வை...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதுப்பிக்க வேண்டி ஏற்படுகிறது. தேய்வை முடிந்தவரையில் குறைப்பதற்கு பெருமளவு உராய்வு நீக்கிகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. உராய்வை நீக்குவதன் மூலம் மிகப் பெருமளவு உலோகமும் உராய்வு நீக்கிகளும் மிச்சமாகும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

தொகுதிகளை ஒழுங்காக்கத் தேவைப்படும் சக்தியை ஆர்முடுகலுக்குட் படுத்தப்பட்ட துணிக்கைகளான இலத்திரன்களிலிருந்து மட்டுமன்றி, மிகை ஒலியிலிருந்தும் (Ultra sound) லேசர் கற்றைகளிலிருந்தும் (laser beams) பெற முடியும் எனப் பௌதிகவியலாளர்கள் நம்புகிறார்கள். இச்சக்தி நுகர்வு, உராய்வினுல் ஏற்படும் சக்தி இழப்பின்றிப் பொறிகள் இயங்குவதனுல் ஏற்படும் நயத்துடன் ஒப்பிடும்போது புறக்கணிக்கத்தக்கதாகும்.

உராய்வற்ற நிலை பரீட்சார்த்தமாக வெற்றிடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நூற்றூண்டு முடிவதற்கு முன்னமே, பரந்த அடிப்படையில் தொழில் துறைகளில் பயன்படும் உராய்வற்ற பொறிகளையும் பொறி முறைகளையும் உருவாக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். □

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 2-6-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.